★ விலை ரூபா 1.25

# ஈழநாடு
THE EELANADU

(1958 வெள்ளி விழா ஆண்டு — 1983)
மலர் 25 புரட்டாதி 21 ஜுல்-கஜ் 29 இதழ் 236
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 7 10 83

## 13 இராணுவவீரர் கொலை: மரண விசாரணை இன்று

### காயமடைந்த வீரர்கள் சாட்சியமளிப்பர்

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலியில் கொலை செய்யப்பட்ட 13 இராணுவ வீரர்களின் மரணம் தொடர்பான விசாரணை இன்று யாழ் மேலதிக நீதவான் திரு. எஸ். நாகராஜா முன்னிலையில் நடைபெறவுள்ளது.

இச்சம்பவத்தின்போது காயமடைந்த இரண்டு இராணுவ வீரர்களும் இவ்விசாரணையின்போது சாட்சியமளிப்பார்கள் என்று தெரிகிறது.

கடந்த ஜுலை மாதம் 23ம் திகதி திருநெல்வேலியில் வைத்து இனந்தெரியாதவர்களால் ராணுவ வீரர்கள் சென்ற வாகனம் தகர்க்கப்பட்டு 13 ராணுவ வீரர்கள் கொலைசெய்யப்பட்டனர். இச்சம்பவத்தின்போது இரண்டு வீரர்கள் காயங்களுடன் உயிர் தப்பினர். [கு]

● கல்குடா தொகுதியிலுள்ள வடமுனைப் பிரதேசத்தில்

# அத்துமீறிக் குடியேறியவர்கள் வெளியேற இன்றுவரை காலக்கெடு

(மட்டக்களப்பு)

கல்குடாத் தொகுதியிலுள்ள வடமுனைப்பிரதேசத்தில் அத்துமீறிக் குடியேறியுள்ள வெளிமாவட்டத்தைச் சேர்ந்த சிங்கள மக்கள் இன்று 7ம்திகதி வெள்ளிக்கிழமைக்குமுன்னர் வெளியேறிவிடவேண்டும் என்று கோரப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவினால் மேற்கண்ட இறுதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவைச் செயல்படுத்தும் பொறுப்பு மகாவலி அபிவிருத்தி அதிகாரசபைத் தலைவர் திரு. பண்டிதரத்னவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கல்குடாத் தொகுதியிலுள்ள வடமுனைப் பகுதியில் அத்துமீறல் குடியேற்றம் அதிகரித்து வருவதையிட்டு அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம், ஜனாதிபதியை மீண்டும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியபின்னர் மேற்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் தேவநாயகம் ஜனாதிபதியைச் சந்தித்தபோது பிரதமர் திருஆர்.பிரேமதாசா, காணி, காணி அபிவிருத்தி மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு.காமினிதிஸநாயக்கா, வர்த்தக கப்பல்துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி, மகாவலி அபிவிருத்தி அதிகாரசபைத் தலைவர் திரு. பண்டிதரத்ன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. சேபால அட்டிகல மற்றும் இராணுவ உயர் அதிகாரிகளும் சகமுமளித்திருந்தனர்.

இத் தகவல்களை அமைச்சர் தேவநாயகம் தெரிவித்தார். (க)

## பிரசவ விடுமுறை 12 வாரங்கள்!

[கொழும்பு]

பெண் ஊழியர்களுக்கு 12 வார காலத்திற்கு பிரசவ விடுமுறை வழங்கப்படவுள்ளது.

இதுவரை 6 வாரத்திற்குமட்டுமே வழங்கப்பட்டுவந்த இந்த லீவு முதல் இரண்டு குழந்தைகளைப் பிரசவிக்கும் பெண் ஊழியர்களுக்குமட்டும் 12 வாரகாலமாக அதிகரிக்கப்படவுள்ளது.

தொழில் அமைச்சர் கப்டன் சி. பி ஜே. செனிவிரத்னவும், மகளிர் விவகார அமைச்சர் திருமதி சுனித்ரா ரணசிங்காவும் நேற்று நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்தே இந்த முடிவு எடுக்கப்பட்டது. [கு]

## இடம்பெயர்ந்த ஊழியரின் எதிர்காலம்: அரசு நிறுவனங்களை வடக்கே விஸ்தரிக்க ஆலோசனை

### கூட்டுத்தாபன கிளைகளைத் திறக்கவும் வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

இனக் கலவரங்களால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து வடபகுதி வந்திருக்கும் கூட்டுத்தாபனங்கள், சபைகள், கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் போன்ற அரசு சார்பு நிறுவனங்களின் ஊழியர்கள் அவர்களது சொந்த மாவட்டங்களிலேயே பணியாற்றக்கூடிய வகையில் மேற்படி அரசு நிறுவனங்களை வடபகுதியில் விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற ஆலோசனை யாழ். அரசாங்க அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கூட்டுத்தாபனங்கள், சபைகள் போன்ற நிறுவனங்களின் கிளைகளை அதிகரிப்பதன்மூலமும் கிளைகள் இங்கு இல்லாத கூட்டுத்தாபனங்கள், சபைகளின் கிளைகளை நிறுவுவதன் மூலமும் இந்த ஊழியர்களின் விருப்பத்தை நிறைவு செய்யமுடியுமென்றும் அரச அதிபரிடம் சுட்டிக்காட்டப்பட்

8ம் பக்கம் பார்க்க

## “அமெரிக்க பாதுகாப்பு அமைச்சரின் இலங்கை விஜயம் குறித்து அச்சம் தேவையில்லை”

### பாராளுமன்றத்தில் பிரதமர் பதில்

[கொழும்பு]

அமெரிக்கபாதுகாப்புஅமைச்சரின் இலங்கை விஜயம் குறித்து எவரும் அச்சம்கொள்ளத்தேவையில்லை என்று பிரதமர் திரு. ஆர். பிரேமதாஸா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஒத்திவைப்புப் பிரேரணையின்

(8ம்பக்கம் பார்க்க)

உ

ஓம் சக்தி

சாவகச்சேரி

ஸ்ரீ துர்க்கையம்மன் தேவஸ்தானம்

நவராத்திரி விழாவும் கேதாரகௌரி விரதமும்

நுணுவில் மேற்கு சாவகச்சேரி துர்க்கையம்மன் தேவஸ்தானத்தில் 7-10-83 வெள்ளிக்கிழமை முதல் 9 நாட்களும் வெகு சிறப்பாக நடைபெறும். அதனைத் தொடர்ந்து

16-10-83 ஞாயிற்றுக்கிழமை கௌரி விரதமும் ஆரம்பமாகும்

அன்றிலிருந்து கௌரி விரதம் முடியும்வரை துர்க்கையம்மனுக்கு விசேட பூஜை நடைபெறும். விரதகாரர்களின் வசதிக்காக இம்முறை 4 மணிக்கு காப்புபூஜை நடைபெறும்.

பெட்டிக்காப்பும் தனிக்காப்பும் கொடுக்கப்படும்.

குறிப்பு: விரதகாரர்களுக்கு கௌரிவிரதப் புஸ்தகம் இலவசமாக வழங்கப்படும்.

அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!!

இவ்வண்ணம்
ப. மகாகணபதி சர்மா
(ஆலய தர்மகர்த்தா)

சாவகச்சேரி,
3-10-83.

9087

அரச, கூட்டுத்தாபனங்களின்

## யாழ். மாவட்ட அலுவலக வெற்றிட விபரம் சேகரிப்பு

[யாழ்ப்பாணம்]

இடம்பெயர்ந்த அரச, கூட்டுத்தாபன ஊழியர்களை அவர்களின் சேர்ந்த இடங்களில் உள்ள அலுவலகங்களில் இருக்கும் காலியிடங்களில் நிரப்புவது என அரசு மேற்கொண்ட முடிவைஅடுத்து யாழ்மாவட்ட அரச கூட்டுத்தாபன அலுவலகங்களில் இருக்கும் காலியிடங்கள் பற்றிய விபரங்களில் ஒரு பகுதி யாழ் அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

அண்மையில் யாழ் செயலகத்தில் அரசாங்க அதிபர் கூட்டிய மகாநாட்டில் கலந்துகொண்ட திணைக்கள, கூட்டுத்தாபனங்களின் பிரதிநிதிகள் 35 பேர் கலந்துகொண்டு ஆலோசனை நடத்தினர்! இம் மாநாட்டிலேயேமேற்சொன்ன விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன!

கூட்டுத்தாபனங்கள், சபைகள் போன்ற அரச சார்பு நிறுவனங்களை வடபகுதிகளில் விஸ்தரிக்கவேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கை பற்றியும் இம் மகாநாட்டில் ஆராயப்பட்டது.

இதேசமயம், அரசாங்க

[8ம் பக்கம் பார்க்க]

நிந்தாவூர் மரணம்:

## உடலுறுப்புகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டன

[கல்முனை]

நிந்தாவூரில் மர்மமான முறையில் மரணமான அறுவரினதும் சடலங்கள் நேற்றுப் பிரேத பரிசோதனை செய்யப்பட்டன.

பிரேத பரிசோதனையின் பின்னர் பிரதான உள்ளுறுப்புகள் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன. டாக்டர் பஞ்சலிங்கம் பிரேத பரிசோதனை செய்தார். [கு]

செல்வ, வீர, வித்யா இலட்சுமி கடாட்சம் பெற நவராத்திரி தினங்களில்

பணவைப்பீடு செய்வோர்க்கு 36% அதித வட்டியை

தமிழர் நிதியம்

சலுகையாக மாதாந்தமும் வழங்கவுள்ளது

140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(தொலைபேசி: 22437)

# வரி விளம்பரம்

## தேவை

வியாபார ஸ்தாபனம் ஒன்றிற்கு அனுபவமுள்ள ஒரு கணக்குப்பிள்ளை உடனடியாகத்தேவை. ஆங்கில அறிவு உள்ளவராயும், வரவுசெலவுக் கணக்குகள் எழுதக்கூடியவராயும், Final Accounts செய்யக் கூடியவராயும், வருமானவரி வேலைகளில் அனுபவமுள்ளவராயும் 35-45வயதுக்குள் இருப்பவராயும் இருத்தல் விரும்பத்தக்கது. முன் அனுபவங்களையும் தகைமைகளையும் குறித்து சொந்தக்கையெழுத்தில் 20ந் திகதிக்குமுன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம் 9146 மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். 9146

சீர்மைக்கிளுவைக்கதியால் (கிளிறிசீடியா) உடன் நடுகைக்குரியதாக ஆயிரம்-1000தோல் முதிர்ந்த கதியால்கள் தேவை. குறைந்த நீளம் 7½அடி, அடிக் கதியால் 4¼'' அங்குலம், நுனி 3'' அங்குல சுற்றளவுள்ள நெளிவற்ற கதியால்களாயிருத்தல் வேண்டும், மொத்தபெறுமதி; கிடைக்குமிடம் மற்றும் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும், விளம்பர இல :9127 C/o ஈழநாடுலிமிட். யாழ்ப்பாணம், 9127

ஆலய நிர்வாக உதவியாளராக கடமையாற்ற ஆசார சீலமான தொண்டுமனப்பான்மையுள்ள குடும்பப்பொறுப்புகளற்ற ஒருவர் உடன்தேவை. தயவுசெய்து நற்சான்றிதழ்களுடன் கடித மூலம்தொடர்பு கொள்ளவும். காரியதரிசி, அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம், கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். 9124

பாற்பண்ணையில் வேலைசெய்வதற்கு சுகதேகிகளான ஆட்கள் தேவை. மலையக மக்கள் விரும்பத்தக்கவர் நற்சான்றிதழ், வைத்திய அத்தாட்சிப் பத்திரம், ஆகியவற்றுடன் விண்ணப்பிக்கவும் இருப்பிட வசதி வழங்கப்படும். உரிமையாளர் சிவாஸ்ரோர்ஸ் No.179 சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம். 9136

''யானை மார்க்'' குளிர்பான விநியோகத்தில் பலதரப்பட்ட வேலைகள் செய்வதற்கு ஆட்கள் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். உரிமையாளர் சிவாஸ்ரோர்ஸ், இல. 179 சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். 9144

அப்பளம் உற்பத்தி செய்வதில் அனுபவமுள்ள ஆண்கள் தேவை. சான்றிதழ்களுடன் நேரில் தொடர்புகொள்ளவும். சம்பளம் நேரில் பேசலாம். ஐங்கரன் ஸ்ரோர்ஸ் புகையிரத நிலையவீதி, கிளிநொச்சி. 9140

பிரபல வர்த்தக ஸ்தாபனமொன்றிற்கு காசாளர் ஒருவர் தேவை. வயது 30க்கும் 45க்கும் இடைப்பட்டவரும், பிணைப்பணம் கட்டக்கூடியவரும் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 9102, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9102

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல வர்த்தக நிலையத்திற்கு வர்த்தகப் பொருட்களை வானில் சென்று விற்பனை செய்யக்கூடிய விற்பனையாளர் தேவை. சம்பளத்துடன் விற்பனை அலவன்ஸ் கொடுக்கப்படும். அனுபவம் உள்ளவரும், பிணைப்பணம் கட்டக்கூடியவரும் உடனடியாக விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 9103 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 9103

## தேவை

வர்த்தக ஸ்தாபனமொன்றின் இசூஸ் E. L. F. 350CC வாகனம் செலுத்தக்கூடிய அனுபவமுள்ள ஒருவர்தேவை. வடபகுதிக்கு பொருட்களை விநியோகிப்பதற்கு ஏற்றவராகவும் உள்ளவர் சம்பள விபரங்களை நேரில் கதைத்துக்கொள்ளவும். விளம்பர இல: 9101, மே/பா ஈழநாடு. யாழ்ப்பாணம். 9101

அனுபவமும், நேர்மையும் பெற்ற பேக்கறி மேசை, தட்டு வேலையாட்கள் உடன் தேவை. வேலைக்கேற்ற நல்ல சம்பளம் வழங்கப்படும். தொடர்புகொள்ளவும்: சோதி பேக்கறி, பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 9128

## விற்பனைக்கு

புதிய ஹொண்டா C 50. (மறு சீரமைக்கப்பட்டதல்ல) புதிதாக எடுத்து ஒரு வருடம் ஒரே கைப் பாவனையிலுள்ளது. நியாயமான கழிவுடன் விற்கப்படும். பார்வையிட்டு நேரில் தீர்த்துக்கொள்ளலாம். A. M. மோகன், 12/1, கன்னாதிட்டி வீதி, சிவன் கோபுர வாசலடி, யாழ்ப்பாணம். 9148

HONDA CD 125 TWIN மோட்டார் சயிக்கிள் உடன் விற்பனைக்குண்டு. 37 (351), மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 9149

ஈச்சமொட்டை வீதியில் வீடு கட்ட உகந்த 1½ பரப்புக்காணி மலிவு விலையில் உண்டு. விபரங்களுக்கு தொடர்புகொள்க: ச. சின்னப்பு, 12, மாட்டின் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 9151

சாவகச்சேரி நகரசபை 3ம் வட்டாரத்தில் மின்சார வசதியுள்ள இடத்தில் வீடுகட்டக் கூடிய 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு; க. கிருபானந்தன் பருத்தித்துறைவீதி, கிராம்புவில், சாவகச்சேரி. 9100

வீட்டுச் சொந்தக்காரர் வெளிநாடு செல்லவிருப்பதால் எலெக்றிக் வெல்லிங் குக்கர், வோசிங் மெசின் (Washing Machine) ரேப் ரெக்கோடர்ஸ் மற்றும் தளபாடங்கள் உட்பட வீட்டுப்பாவனைப் பொருட்கள் விற்பனைக்குண்டு. Dr. அருளையா 21, சேர். பொன். இராமநாதன் ரோட், யாழ்ப்பாணம். 9099

சகல வியாபாரத்திற்கும் ஏற்ற யாழ். பிரதான வீதி-நாலாம் குறுக்குத் தெரு சந்தியில் 4 கடைகளும் சகல வசதிகளுடன் கூடிய வீடும் (காலியான நிலையில்) விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 63, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24025. (9109)

நல்லூர் கல்வி அலுவலகத்திற்கு அண்மையில்உள்ள செல்லர் ஒழுங்கையில் வீடுகட்டுவதற்கேற்ற 4½பரப்புக்காணித் துண்டு விற்பனைக்கு உண்டு. தேவைப்படுவோர் மேற்கொண்டு விபரத்துக்கு கீழ்க் காணும் முகவரிக்குத்தொடர்பு கொள்ளவும்: திரு. நெல்சன் இராசையா, பிரவுண் அன்கோ லிமிட்டட், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 9107

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## பயிற்சி

Computer Programming (Basic-Cobol) Computer மொழிகளில் கூடிய நேர செய்முறைப் பயிற்சியளிக்கப்படும். T. V. வீடியோ டெக் றிப்பியறிங் எலக்றிக்கல் வயறிங், Hotel management வெல்டிங், ஏயர் கொண்டிசனிங் சகல பயிற்சிகளிற்கும் இரண்டுமாத செய்முறைப் பயிற்சியளிக்கப்படும். மற்றும் Spoken English French உம் புதிய பயிற்சியளிக்கப்படும். ஆரம்பம் 14-10-83 விபரங்களிற்கு: The School of Computer Studies 52/1, கனகரத்தினம் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 9061

## சேவை

தங்கள் இல்லங்களுக்கு வந்து எவர்சில்வர்பாத்திரங்களுக்குப் பெயர் வெட்டிக்கொடுக்கப்படும். எழுத்து ஒன்றுக்கு 25 சதம். விபரங்களுக்கு: எல். சக்திவேல், இல. 131, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 9150

கலர் பிலிம்ஸ் சுருள்களைச் சிறந்தமுறையில் Processing and Printing செய்துகொள்ள யாழ்ப்பாணம் கொழும்பு ஸ்ரூடியோவை நாடுங்கள். 9145

## கல்வி

சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த சான்றிதழுடன் நீங்கள் வெளிநாடு செல்ல ஓர் அரிய சந்தர்ப்பம். ஒருமாத வெல்டிங், வயரிங், மோட்டர் மெக்கானிசம் வகுப்புகள் நடைபெறுகின்றன. J. E. C. 38, பருத்தித்துறைவீதி, யாழ்ப்பாணம். 9096

G.C.E. A/L 84/85புதிய வகுப்புகள் நடைபெறுகின்றன. கணக்கியல்-மரியதாஸ், பொருளியல் - குமாரவேல், இந்து நாகரீகம்-அருள்நங்கை, அளவையியல்-சுதாகர், தமிழ்-மீரா. J. E. C. 33, பருத்தித்துறைவீதி, யாழ்ப்பாணம். 9095

G. C. E. (O/L), G. C. E (A/L) கலை, விஞ்ஞானம், வர்த்தகம், Typing, Short hand, G. S. Q. (Bio), B.Sc. (Bio) 17-10-1983 ஆரம்பமாகின்றது வசதிகுறைந்தவர்களுக்குச் சில சலுகைகள் கொடுக்கப்படும். இக்கல்லூரி கல்வித் திணைக்களத்தால் விஞ்ஞான ஆய்வுகூடம் உட்பட அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட பாடசாலையாகும். விபரத்துக்கு:- அதிபர், உயர் கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 9132

## பகிரங்க ஏலவிற்பனை
### மலை வேம்பு மரம் ஒன்று (01)

யாழ்ப்பாணம் கச்சேரிக்கு அருகாமையில் சுண்டிக்குளி தபால் அலுவலக வளவிற்குள் தறிக்கப்பட்ட மலைவேம்பு மரம் ஒன்று(01)1983-ம்ஆண்டு ஒக்டோபர் மாதம் 10-ந் திகதி (10-10-1983) திங்கட்கிழமை முற்பகல் 10-30 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஆகக்கூடிய தொகையைக் கேட்கும் ஏலதாரர் உடனடியாகப் பணத்தைச் செலுத்துவதுடன் மூன்று (03) நாட்களுக்குள் மரத்தை அப்புறப்படுத்துதல் வேண்டும்.

மேல் விபரங்களை யாழ் செயலக நிர்வாகஉத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு அறிந்துகொள்ளலாம்

**சி. சிவகுருநாதன்,**
நிர்வாக உத்தியோகத்தரும் காரியாலய உதவியாளரும்.
செயலகம்,
யாழ்ப்பாணம்,
1983-10-5. (9143)

## சோதிடம்

பிரபல சோதிடர் Prof: K. நடராஜா ஜே. பி யை 'லிங்ககிரி' அளவெட்டி (தபாற்கந்தோருக்கு எதிரில்) என்ற முகவரியில் தற்போது தொடர்பு கொள்ளலாம். 9086

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
## கேள்வி அறிவித்தல்

பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 19-10-1983-ந் திகதி புதன்கிழமை நண்பகல் 12-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

01. யாழ். பெரியகடை நவீன சந்தைக்கு இரும்பு சுருக்கு கேற் செய்து பொருத்தல்.
02. யாழ். சின்னக்கடைச் சந்தைக் கட்டிடத்திற்கு சுருக்கு கதவு, பிரிசுவர், கதவுகள் அமைத்தல்.

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 18-10-1983-ந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணி வரை கேள்விப்படிவக் கட்டணமாக ரூபா 50/-ம், கேள்வி வைப்புப் பணமாக ரூபா 250/-ம் செலுத்துவதன் பேரில் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களின் இணைப்பிரதிகளில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

**சி. வீ. கே. சிவஞானம்,**
மாநகர ஆணையாளர்.
மாநகராட்சி மன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
05-10-83. (9147)

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



சிவராசா—காயத்திரி
(டயானு)
7-10-83

திருநெல்வேலி வளாக வீதியில் வதியும் சிவராசா தம்பதிகளின் புதல்வி காயத்திரி முதலாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் வெகு விமரிசையாக இன்று கொண்டாடுகிறார். அவரை உற்றார் உறவினர்கள் யாவரும் ஆதிமாகாளி அருள் பெற்று நீடூழி வாழ்க வென்று வாழ்த்துகிறார்கள்.

(9133)

## பண்ணை முகாமில் நவராத்திரி

(யாழ்ப்பாணம்)
பண்ணை அகதிகள் முகாமில் இன்று முதல் நவராத்திரி விழா தினமும் கொண்டாடப் படவிருக்கிறது. தினமும் இசைக்கச்சேரியும் கலைநிகழ்ச்சியும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (க)

## அகதிகளுக்கு உடுபுடவை

(புலோலி)
இலங்கை உலக இந்து மகா சபையும் (விஷ்வஹிந்துபரிசத்) யாழ். மங்கையர் கழகமும் இணைந்து இலங்கைக் குடும்பத் திட்டச்சங்க யாழ். மாவட்ட தும்பளை மாதிரிக் கிராம செயற்குழுவின் அனுசரணையுடன் அண்மையில் ஏற்பட்ட வன்செயல்களினுல் பாதிக்கப்பட்ட 25 அகதிக் குடும்பங்களுக்கு உடுபுடவைகள் வழங்கியது.

இவ் அகதிகளுக்கு உடுபுடவைகள் வழங்கும் வைபவம் பருத்தித்துறை தும்பளை சைவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட
நீதிமன்றத்தில்
கட்டுடை மானிப்பாயைச் சேர்ந்த என். யெகராஜா கைம்பெண் பொன்னம்மா என்பவரால் விட்டிறந்த மரண சாதனம் எழுதப்படாத சொத்துகளுக்கு நிர்வாகத்தத்துவம் பெறக் கோரும் மனு சம்பந்தமாக

(மரண மெய்தியவர்)
மரணச்சொத்து / நியாயாதிக்கம் } இல 3747/த

திருமதி இராசம்மா சோமத்திலகம்இல 25 1/ லோறிஸ் வீதி, கொழும்பு-4
மனுதார்

எதிர்

1. திருமதி நல்லம்மா இராசையா கட்டுடை மானிப்பாய்.
2. திருமதி தெளசிகா இன்பராஜ் இல. 27 டி பொன்சேகா பிளேஸ் கொழும்பு-4
3. திருமதி தினேயிகேதீஸ்வரன் இல: 11/1 கேம்பிறிட்ஜ் பிளேஸ் கொழும்பு-7

எதிர்மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனமில்லாத தத்துவவழக்கு மேலே குறிக்கப்பட்ட இறந்து போனவரின் சொத்துக்களை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனும் 1983ம் ஆண்டு புரட்டாதி மாதம் 2ம் திகதி முற்பகல் 9 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக்காரணம் காட்டுமாறுஇத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்ற ஆணைப்படி
**தா. குலஞானம்**
பதிவாளர்

1983ம் ஆண்டு ஆடி மாதம் 18ம் திகதி
வரைந்தவர்
**சி. இராசேந்திரன்**
மனுதாரின் சட்டத்தரணி
2-9-83

காரணம் காட்டும் திகதி 20-10-83க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

**தா. குலஞானம்**
பதிவாளர்
9089

# வலேஸாவுக்கு 'நோபல்' பரிசு: றீகன் பாப்பரசர் மகிழ்ச்சி!

## நேரடியாகச்சென்று பரிசைப்பெற போலந்து அரசு அனுமதி மறுக்குமா?

வார்ஸோ, அக். 6

போலந்தின் தடைசெய்யப்பட்ட சொலிடாறிற்றி தொழிற்சங்கத் தலைவர் திரு. லேக் வலேஸாவுக்கு 'நோபல்' சமாதானப் பரிசு வழங்கப்படவிருப்பது குறித்து அமெரிக்க ஜனாதிபதி திரு. றெனல்ட் றீகன், பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் ஆகியோர் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

திரு. வலேஸாவுக்கு நோபல் பரிசுகிடைத்ததையிட்டு அவருக்கு வாழ்த்துத் தெரிவித்திருக்கும் திரு. றீகன் தொழிற்சங்க நடவடிக்கைகளை திரு. வலேஸா மிகவும் அமைதியாக நடத்தியதாலேயே 'நோபல்' பரிசு அவருக்குக் கிடைத்ததாக குறிப்பிட்டுள்ளார்.

வத்திக்கானில் இருக்கும் பரிசுத்த பாப்பரசர் வலேஸாவுக்கு நோபல்பரிசு கிடைத்திருப்பது பற்றி அறிவிக்கப்பட்டதும் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். அத்துடன் திரு. வலேஸாவுக்கு தமது வாழ்த்தையும் அவர் தெரிவித்தார். திரு. வலேஸா தமது நாட்டவரான பாப்பரசர்மீது மிகுந்த பக்திகொண்டவராவார் என்பது குறிப்பிடத்தக்கது

இதேவேளையில் திரு. வலேஸாவிற்கு 'நோபல்' சமாதானப் பரிசு வழங்கப்படுவது ஒரு அரசியல் ரீதியானநடவடிக்கையென்றும், மேற்கு நாடுகளின் செல்வாக்கினலேயே அவருக்கு இப்பரிசு கிடைத்ததென்றும் போலந்து அரசாங்கம் கருத்து வெளியிட்டுள்ளது.

### சோவியத் அதிருப்தி?

சோவியத்யூனியனின் கிரெம்ளின் உயர் பீடமும் இவருக்குக்கிடைக்கஇருக்கும் நோபல் சமாதானப் பரிசு குறித்து அபிப்பிராயம் எதுவும் தெரிவிக்கவில்லை. இப்பரிசு வழங்கப்பட்டிருப்பது குறித்து அது அதிருப்தி கொண்டிருப்பதாகவே அறியப்படுகிறது.

இதுஇவ்வாறிருக்க நேற்று வலேஸாவுக்கு நோபல்பரிசு வழங்கப்படுவது குறித்து அறிவிக்கப்பட்டதும் அவருடைய இல்லத்துக்கு வெளியே ஆதரவாளர்கள் திரண்டுநின்று பெரும் மகிழ்ச்சி ஆரவாரஞ் செய்தனர்.

### நவ. 10ம் திகதி பரிசு வழங்கப்படும்

திரு. வலேஸாவுக்கு நவம்பர்மாதம் பத்தாம் திகதி நோர்வேயின் தலைநகரான ஒஸ்லோவிலுள்ள பழைய பல்கலைக்கழக மண்டபமொன்றில் நோபல் பரிசு வழங்கப்படும் அப்பரிசுக்கான பணத்தொகை 1லட்சத்து 92ஆயிரம் டாலர் ஆகும்.

திரு. வலேஸா தமக்குக் கிடைக்கவிருக்கும் நோபல் பரிசுக்கான பணத்தொகையை போலந்தின் விவசாயத்துறைக்கென வழங்கப்போவதாக தெரிவித்துள்ளார்.

### நேரில் சென்று பரிசைப்பெற அனுமதிகிடைக்குமா?

நோபல் பரிசு கிடைத்துள்ள இதேவேளை புதிய சர்ச்சையொன்றையும் திரு. வலேஸா எதிர்நோக்குகின்றர் போலந்து அரசாங்கம் நோபல் பரிசை நெரடியாகச் சென்று பெறுவதற்கு இவரை அனுமதிக்குமா என்பதே சர்ச்சைக்குரியதாகவுள்ளது போலந்து அரசுக்கு பெரும்நெருக்கடி நிலைகளைத் தோற்றுவித்தவரான திரு. வலேஸாவுக்கு 'நோபல்' பரிசு கிடைத்திருப்பது குறித்து அவ் அரசு அதிருப்தி கொண்டிருப்பதால், அவரை நேரில்சென்று அப்பரிசைப்பெற அனுமதி மறுக்கப்படலாம் எனக்கருதப்படுகிறது. (கி)

# இஸ்ரேலில் புதிய அரசு அமைப்பதில் ஷமீர் வெற்றி!

ரெல்அவிவ் அக் 6

இஸ்ரேலிய பிரதம மந்திரியாக பதவியேற்கவுள்ள திரு. யிட்ஷக் ஷமீர் புதிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதில் வெற்றி கண்டுள்ளார்.

திரு. ஷமீர் இஸ்ரேலின் ஆளும் கட்சித்தலைவராக தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் தமது புதிய அரசாங்கத்தை அமைப்பதில் பல நெருக்கடிகளை அவர் எதிர்நோக்கியிருந்தார்.

இஸ்ரேலின் பழமைவாதக் கட்சியினரின் ஆதரவைப் பெற்றதையடுத்தே திரு. ஷமீர் புதிய அரசாங்கத்தை அமைக்கும் வலுவைப்பெற்ருர்.

எதிர்வரும் திங்கட்கிழமை இவர் புதிய பாராளுமன்றத்தைக்கூட்டப்போவதாக அறிவித்துள்ளார். இஸ்ரேலின்

(7-ம் பக்கம் பார்க்க

# லெபனுனுக்கு அமெரிக்கா மேலும் இராணுவ உதவி!

பெய்ரூட் அக் 6

லெபனுன் இராணுவத்துக்கு அமெரிக்க 250 இராணுவ வண்டிகளையும், அறுபது இயந்திரத் துப்பாக்கிகளையும் வழங்கியுள்ளது. இந்த உதவிகள் நேற்று வழங்கப்பட்டன.

சிலமாதங்களுக்கு முன்னர் இதுபோன்று பெருமளவிலான இராணுவ சாதனங்களை லெபனுனுக்கு அமெரிக்கா வழங்கியிருந்தது.

இதேவேளை லெபனுன் டுரூஸ் இயக்கத்தலைவர் ஜும்ப்லாட் லெபனுனில் தேர்தல் முறைமூலம் புதிய ஆட்சி அமைக்கப்பட வேண்டுமென்றும் லெபனுன் இராணுவத்திலுள்ள கிறிஸ்தவ ஆதிக்கம்

[7-ம் பக்கம் பார்க்க]

# "பெண்ணினம் மதிக்கப்படாத நாட்டில் அபிவிருத்தி ஒரு போதும் ஏற்படாது!"

## இந்திய ஜனதிபதி ஸெயில்சிங் கருத்து

புதுடில்லி அக் 6

''பெண்ணினம் மதிக்கப்படாத ஒருநாட்டில் அபிவிருத்தி ஒருபோதும் ஏற்படமாட்டாது. அவர்களுக்கெதிரான கொடுமைகள் யாவும் ஒழிக்கப்படவேண்டும்'' என்று இந்திய ஜனதிபதி திரு. ஜியானி ஸெயில்சிங் தெரிவித்தார்.

புதுடில்லியில் நேற்று நடைபெற்ற தகவல் தொடர்பு சாதனங்கள் பற்றிய கருத்தரங்கொன்றிற்கு தலைமைவகித்துப் பேசுகையிலேயே திரு. ஸெயில்சிங் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது: ''வரதட்சணைக் கொடுமைகளால் இன்று பெண்ணினம் பெரும் சோதனைக்குள்ளாகியுள்ளது. பெண்ணினம் மதிக்கப்படாத நாட்டில் அபிவிருத்தி என்றுமே ஏற்படமாட்டாது.

வரதட்சணைக் கொடுமைகளால் பல பெண்கள் வாழ்வில் சொல்லொணுத் துயரங்களை அனுபவிக்கின்றனர்.

(7ம் பக்கம் பார்க்க)


யாழ்நகர் ஸ்ரான்லி வீதியில்

இன்று

மங்களகரமான திறப்பு விழா



ருஜாந்தி பேணிச்சர்ஸ்

RUJANTHIE FURNITURES



இலங்கை வங்கி யாழ். மாவட்ட முகாமையாளர்

திரு. C. ஶ்ரீரங்கநாதன்

அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படும்.

கவர்ச்சிகரமான வீட்டுத் தளபாடங்கள், ஆர்ப்பிபோம், சியஸ்ரா மெத்தைகளை

மலிவான விலையில் பெற்றுக்கொள்ள விஜயம் செய்யுங்கள்.

(விலை :- 500/- முதல் 10,500/- வரை)

ருஜாந்தி பேணிச்சர்ஸ்

(ஶ்ரீதர் சினிமா முன்பாக)

234/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்நகர்.

## மணிவாக்கு

மாதர் யாவரையும் உன் சொந்தத்தாயெனக்காண். மாது ஒருத்தியினுடைய முகத்தை ஒருபொழுதும் பாராது அவளுடைய பாதங்களையே பார். அப்பொழுது தீய சிந்தனைகள் யாவும் பறந்தோடி விடும்.

— ஸ்ரீ ராமகிருஷ்ணர்

# நமது நோக்கு

## பஞ்சகோணமும் (Pentagon) திராவிட தீவிரமும்

பிரிட்டிஷ் ஆட்சியின் ஆகுபெயர் உவைற்ஹோல் (White hall) என்பதுபோல் அமெரிக்க ஆட்சியை பென்டகன் (Pentagon) என்று சொல்லப்படுகின்றது.

ஒருமுறைதொலைபேசியில் லண்டனிலுள்ள இந்திய காரியாலயத் (India office) துடன்பேசமுயன்ற உவைற்ஹோல் அதிகாரி தவருக 'இந்தியா ஹவுஸ்' (India House) என்ற ஸ்தாபனத்துடன் தொடர்பு கொண்டாராம்; அங்கு இரவும் பகலும் இந்திய சுதந்திரத்துக்கு உழைத்து வந்த காலஞ்சென்ற வீ. கே. கிருஷ்ணமேனன் பதிலளித்தார்.

''ஹலோ இது பிழையான நம்பர் நாம் இந்தியா ஹவுஸ்'' என்முராம். நீங்கள் யாரைக் கூப்பிடுகின்றீர்கள்?''

பதில் ''இந்திய ஆபிஸ்''!

மேனன் ''பரவாயில்லை நாமும் விரைவில் அந்த நிறுவனமாகுவோம்'' என்று சிரித்தாராம். சிந்தனையில் எழுந்த சிரிப்பு.

இவ்வாறு பலவிதப்பட்ட ஆகுபெயர்கள் உலகத்தைக் கட்டி அவிழ்க்கின்றன.

தனிமனிதன் நெப்போலியனைப்போல எவ்வித ஆண்மையுடையவனுனலும் அவனைச் சுற்றி ஒரு ஆகுபெயர் தொழிற்படும்.

இன்று பென்டகன் ஒரு புறத்திலும் கிறெம்லின் (Kremlin) மறுபுறத்திலும் அனைத்துலகையும் சுருட்டி விடக்கூடிய வல்லமை கொண்டிருக்கின்றன.

எனவே சிறிய நாடுகள் தனித்தியங்க முடியாத நிலையில் இவற்றை அண்டிப் பிழைக்க எத்தனிப்பது இயல்பு.

ஜனதிபதி றீகன் வருகிற மாதம் நடத்தவிருக்கும் ஆசிய பயணத்தில்மணிலா, பாங்கொக், ஜகார்த்தாவாகிய மூன்று இடங்களையும்ரத்துச் செய்துவிட்டார்.

வெள்ளை மாளிகை இவ்வாறு சொல்லுகிறது.

இதுபற்றி அவர் வேதனைப்படுகிறர். ஆனல் தவிர்க்கமுடியாதது. அவர் நினைத்தாலும் பென்டகன் விடாது

ரகசியம்: மணிலாவிற்குப் போசமுடியாததால் மற்ற இரு இடங்களையும் சோடிபோட்டுவிட்டிருக்கிறது, சந்தேகத்தைத் தவிர்ப்பதே நோக்கம்.

பிலிப்பைன்ஸ் ஜனதிபதி மார்க்கொஸ் பெருங்கவலையுற்றிருக்கிறர். ஜனதிபதி றீகன அவருடைய காப்பாளர். கடைசி நேரத்தில் தம்மைக்கை விட்டிருக்கிறர். நாட்டில் தம்முடைய ஆட்சியில் - நம்பிக்கையில்லை என்ற பேச்சுக்கு இடமாயிற்றுதே! இது அவருடைய புலம்பல்.

ஆனல் பிலிப்பைன்ஸ் ஜனதிபதி, ஜனதிபதி றீகனின் பாதுகாப்புக்கு எவ்வாறு உத்தரவாதமளிக்க முடியும்?

அண்மையில் மணிலா விமான நிலையத்தில் வந்திறங்கிய எதிர்க் கட்சித் தலைவர் அந்தக்கணமே சுட்டுக் கொல்லப்பட்டார்; நாட்டின் கொந்தளிப்பு அது காரணமாக இன்னுந்தணியவில்லை.

''பார்த்துக் கொள்கிறேன்! பிலிப்பைன்ஸில் அமெரிக்கா அமைக்கவிருக்கும் தளங்களின் நிலை சந்தேகம்!'' என்கிறர் மார்க்கொஸ்

ஆங்கில ஏகாதிபத்தியம் குலைந்த பின், கறுத்த மனிதரின் விமோசனம் (வெள்ளையரின் பொறுப்பு - White Man's Burden) அமெரிக்காவிற்கு கைமாறியிருப்பதாகப் பேசப்படுகிறது.

எனவே பசிபிக் பாதுகாப்பு, இந்து சமுத்திரப் பாதுகாப்பு போன்ற விடயங்களில் பென்டகன் முன்னிற்கின்றது.

இது உண்மையென்று கருதினல் கிறெம்லின் சும்மா இருக்குமா?

இந்து சமுத்திரம் சமாதான பிராந்தியமாக வேண்டுமென்று பெருங்குரல் எழுப்பியது இலங்கை; இந்தியா அதனைத் தொடர்ந்து அதுபற்றித் தீவிரமாகின்றது.

இந்த நெருக்கடியில் எங்கள் நாடும் பெருஞ் சந்தேகத்துள்ளாகி வருகிறதற்கு காரணம் இன்றைய உள்நாட்டுப் பிரச்னை. இது பெருத்துவிடாமல், வெளிநாடுகள் தலையிட முன்னிட்டால் இப்பிரதேசத்துக்கு ஆபத்து என்று இந்தியா கருதுகிறது.

எங்கள் நாட்டின் இனக் கொடுமையால் ஆத்திரப்படுகின்ற தமிழகதிராவிடக் கழகத்தினர் அண்மையில் நடைபெற்ற அமெரிக்கபாதுகாப்பு அமைச்சர் வெயின் பேகர் — ஜனதிபதி ஜெயவர்த்தன சந்திப்பு பற்றி பலத்த ஆட்சேபம் கிளப்பியிருக்கின்றனர்; அது வீண் (vain) சந்தேகமென்று தள்ளிவிட முடியுமா?

திராவிட மூளைக்கு தீவிரவாதம் எட்டாம் பொருத்தம். சைவ சித்தாந்த சாத்திரத்தை, திராவிட சிந்தனைத் திறனைவிட வேறெந்த ஆற்றல் படைத்த சமுதாயமும் உருவாக்கியிருக்க முடியாதெனறு டாக்டர் ஜி. யூ. போப் சரியாகச்சொல்லியிருக்கிறர்.

இன்று 500 லட்சம் திராவிட மக்கள் இலங்கைத் தமிழர் பாதுகாப்பு பற்றி விழிப்பாக விருப்பதோடு நடந்த சம்பவங்களை இட்டு 100 லட்சம் கையெழுத்து மகஜர் ஐ. நாவுக்கு அனுப்பியதும், அமெரிக்க பாதுகாப்பு அமைச்சரின் அந்தரங்கவிஷயங்களை ஆராய்ந்து ஆரவாரப்படுவதும், எங்கள் பிரச்னை சாதாரண பிரச்னையல்லவென்பதின் அர்த்தம்.

'இதனை அமெரிக்கா சமாதானமாகத் தீர்க்க முடியுமாஞல் அது வரவேற்கத் தக்கது'' என்கிறர் பிரதமர் இந்திரா.

இன்றைய இலங்கை ஆட்சியைப் பலப்படுத்திப் பாதுகாக்கவேண்டுமென்று அமெரிக்கா விரும்பினுல் தனது இராஜதந்திரத்தில் எவ்வித தவறும் ஏற்பட இடமளிக்கப்படாது; இன்றேல் இலங்கை போன்ற அமைதி விரும்பும் நாடுகளையும் வியட்நாம், லெபனுன் போன்ற நிலைக்குத் தள்ளி விடுகிறதென்ற பழிக்கு ஆளாகும்.

## இன்று நவராத்திரி ஆரம்பம்

# அணிவோரைக் காக்கும் அன்னைக் கவசம்!

வெற்றியைத்தரும் தெய்வம், வீரர்கள் வணங்கும் தெய்வம், வீரர்களை ஆக்கும் தெய்வம் கொற்றவை. அவள் தமிழ்த்தெய்வம். காடுகிழாள் எனப்பண்டைய தமிழரால் பாடப்பெற்ற தெய்வம். வீர மிகும் தானைத்தலைவஞன திருமுருகன் கரத்தில் வெற்றிவடிவான வேலாகவிளங்கும் சக்தித்தெய்வம். தாய்த்தெய்வம்.

நெஞ்சுக்குநீதியும் தோளுக்கு வாளும்ஆகிநிறைவாழ்வுதரும். மங்கள சண்டிகையின் திருவருட்திறனைப்பாடும் ஸ்ரீதேவி மகாத்மியம் ஒரேபெரும் சக்தி ஒன்பது வடிவுதாங்கி, அன்பர்களைக்காக்க அவர்களின் அவயவங்கள்தோறும் அருள்வடிவில் புகுந்து தானேஒரு கவசமாகிற தண்ணளியைச் சிறப்பித்துப் பாடுகிறது. இந்தத் தேவீ கவசத்தை அணிகின்ற எவர்க்கும் எந்தவிதமான விபத்தும், துன்பமும் ஏற்படாது. எவ்வித பகையும், விஷமும், ஆயுதங்களும், தீமுதலியவற்றுல் ஏற்படக்கூடிய இடையூறுகளும், வேறுவிபத்துக்களும் இந்தக் கவசத்தை அணிந்தவரைப் பாதிக்கவேமாட்டா எனநிறைமொழி மாதவர்கள் உறுதிகூறி இருக்கிறர்கள்.

தன்னைச் சரணடைந்தநல்லவர்களைக் காப்பதற்காகவும், உலகிற்குத் துன்பம் விளைவிக்கும் அசுரகுணம் படைத்த தீயவர்களை அழிப்பதற்குமாக அம்மை மகாசக்தி நவதுர்க்கைகளின் வடிவில் தோன்றினுள். முறையே பார்வதராஜகுமாரி, பிரஹ்மச்சாரிணி, சந்திர கண்டா, கூஷ்மாண்டா, ஸ்கந்தமாதா, காத்யாயனீ, காலராத்திரீ, மகாகௌரி, சித்திப்பிரதா என அந்தநவ துர்க்கைகளின் நாமங்கள்கூறப்பட்டுள்ளன.

அக்கினியிடத்திலோ, யுத்தத்திலோ, பகைவரிடத்திலோ அகப்பட்டுக் கொண்டவர்களும், கடக்கமுடியாத சங்கடத்திஞல் பயமடைந்தவர்களும் மேற்கூறிய நாமங்களில் ஒன்றை நினைத்துத்தேவியிடம் சரணமடைந்தால் அவர்கள் நிச்சயமாகக் காக்கப்படுவார்கள்.

ஜெயஜெயசைலபுத்திரிப்ரஹ்ம<br>சாரிணி சந்த்ர கண்டினியே<br>ஜெய ஜெய கூஷ் மாண்டினி ஸ்கந்த<br>மாதினி காத்யா யன்யயளே<br>ஜெய ஜெய கால ராத்திரி கௌரி<br>ஸித்திதா ஸ்ரீநவ துர்க்கை யளே<br>ரோக நிவாரணி சோக நிவாரணி<br>தாபநிவாரணிஜெயதுர்க்கா!

மகாபலம் பொருந்தியவளே! மஹோத்ஸாகம் உடையவளே! கொடிய பயத்தைப் போக்குபவளே! சத்துருக்களுக்குப் பயத்தை வளர்ப்பவளே! காட்சிக்கரிய தேவியே! என்னைக் காத்தருள்வாய்! கிழக்கினில் என்னை இந்திராணி காப்பாற்றட்டும்.

அக்கினி மூலையில் அக்கினி தேவதையும், தெற்கில் வாராஹியும், நிருதிமூலையில் கட்கதாரிணியும் காக்க! மேற்கில் வாருணீசக்தி காக்க; வாயுமூலையில் மிருகவாகினியான வாயுசக்தி காக்க, வடக்கில் கௌமாரி காக்க, ஈசானமூலையில் சூலதாரிணி காப்பாற்றுக!

பிரஹ்மாணி! மேலே நீ காத்தருள்வாய்; விஷ்ணு சக்தியே! கீழே நீ காத்தருள்வாய்! பத்துத் திசையிலுமிருந்து சவவாகனமுடைய சாமுண்டாதேவி என்னைக் காத்திடுக!

ஜயா சக்தி என் முன்னிருக்கட்டும்; விஜ்யாசக்தி பின் நிற்கட்டும்; அஜிதாதேவி இடது பக்கமும்; அபராஜிதாதேவி வலதுபக்கமும் நிற்கட்டும்.

சிகையை உத்யோதினீ சக்தி காக்க; சிரசில் உறையும் உமாசிரசைக்காக்க நெற்றியை மாலாதாரி காக்க, புருவத்தினை யசஸ்வினி காக்க

புருவநடுவில் திரிநேத்ரா தேவி காக்க, நாசிகையை யமகண்டாதேவி காக்க; கண்களின் நடுவில் சங்கினீ சக்தி காக்க, காதுகளைத் துவாரஸினீ சக்தி காக்க.

கன்னத்தில் காளிசாதேவி காக்க; காதின் அடியில் சாங்கரீதேவி காக்க, நாசியைச் சுகந்தாதேவி காக்க; மேலுதட்டினை சர்ச்சிகாதேவியும், கீழ் உதட்டினை அம்ருதகலா தேவியும் காக்க.

நாக்கினைச் சரஸ்வதிதேவி காக்க, பற்களைக் கௌமாரியும், கழுத்தின் நடுவில் சண்டிகையும் காப்பாற்றுக.

(5-ம் பக்கம் பார்க்க)

### நிவேதிதா

## வெள்ளிச்சிந்தனை

### நவக்கிரகங்கள்

—அருளாளன்

அசோகவனத்தில் இராமனைப் பிரிந்து வருந்திய சீதை ''முற்பிறப்பில் எந்தக் குடும்பத்தைப் பிரித்து வைத்த பாவம் எனக்கு இப்படியான துன்பத்தைத் தருகிறதோ தெரியவில்லை'' என வருந்திஞள் என்கிறர் கம்பர்,

ஒருவனது நிழல் அவனை விடாது தொடர்வது போன்று தீவினை செய்தார் அதன் விளைவாக வருந்துவது தப்பாது என்பதனை வள்ளுவர் ''தீவினை செய்தார் கெடுதல் நிழல் தன்னை வீயாது அடியுறைந்தற்று'' என்ற குறள் மூலம் சொல்லியுள்ளார்.

இந்த அடிப்படையில் ஒருவர் செய்த தீவினையும் நல்வினையும் அவரை எக்காலத்தில் எவ்விதம் சென்று சேரும் என்பதையே நவக்கிரகங்கள் காட்டும்.

பாடசாலையில் பத்து ஆசிரியர்களிருந்தால் அவர்கள் பத்து வகுப்புகட்குக் கல்விகற்பிப்பர். அல்லது பத்துப் பாடங்களைக் கற்பிப்பர். இதே போன்று உலகை ஒழுங்குபடுத்துவனவாயும் ஒவ்வொருவரினது வாழ்வினைப் பிரதிபலிப்பனவாயும் உள்ள நவக்கிரகங்கள் ஒருவனின் வாழ்வினை ஒன்பது வகையாகப் பர்ந்து அவனது நல்வினை தீவினையும் சுகதுக்கங்களையும் அறிய உதவுகின்றன.

(5ம் பக்கம் பார்க்க)

## இந்தியாவில் 'அமிர்' அளித்த பேட்டி

4-9-83 ''ஈழநாடு'' இதழில் ''மக்கள் கருத்து'' பகுதியில் ''இந்தியாமீது பற்று'' என்ற தலைப்பில் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த திரு. ம. பயஸ் அவர்கள் எடுத்துக் காட்டியுள்ள சில பொருத்தமற்ற கருத்துக்களை மறுத்துரைப்பது அவசியம் என்பதால் இதனை எழுதுகின்றேன்.

1977-ம் ஆண்டு ஆகஸ்ட் கலவரத்தின்போது காலஞ்சென்ற பகுத்தறிவுவாதியும்,

### மக்கள் கருத்து

கேரள சமாஜத்தின் அன்றைய தலைவருமான அறிஞர் டாக்டர் ஏபிரகாம் கோவூர் அவர்கள் இன்றைய ஜனதிபதியும், அன்றைய பிரதமருமான திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்களுக்கு எழுதிய பகிரங்க கடிதத்தில் கூறியவற்றை மீண்டும் நாம் ஞாபகப்படுத்துவது உகந்தது.

இலங்கையில் சிங்கள இனம் நிம்மதியாக வாழவேண்டுமென்றல் தமிழ் மக்களுடன் சுமுகமான உறவுடன் வாழவேண்டும். இல்லாமல் தமிழ் மக்களுக்குத் தொடர்ந்து இன்னல் விளைவித்தால் இந்தியாவின் மக்கள் மொழி, இன, மதரீதியில் தமிழருக்கு ஆதரவும், அபயமும் அளிப்பது தவிர்க்க முடியாததென்று வலியுறுத்திஞர்.

மொழி ரீதியாக தமிழர் தாக்கப்பட்டால் சில மைல்கள் தொலைவிலுள்ள 6 கோடி தமிழ்நாட்டு மக்களின் கோபத்திற்காளாகவேண்டிய நிலை ஏற்படும். இன ரீதியாக சிந்திந்த்தால் 19 கோடி திராவிடரின் கோபத்திற்கும், மத ரீதியாக சிந்தித்தால் 50கோடி இந்துக்களது கோபத்திற்கும் சிங்கள மக்கள் உள்ளாவது தவிர்க்கமுடியாதது என்று கோடிட்டுக் காட்டினர் டாக்டர் கோவூர்.

தமிழர் என்பதால் தமிழ்நாடு இலங்கைத்தமிழர்களுக்குக் குரல் கொடுப்பது போலவே இந்துக்களென்பதால் அனைத்து இந்தியாவும் இலங்கைத்தமிழர்பால் அனுதாபம் கொண்டுள்ளது என்

(8-ம் பக்கம் பார்க்க)

### சஞ்சலந் தீர்த்திடுவாய் தேவி!

துர்க்கையாய்ச் சரஸ்வதியாய்<br>இலட்சுமியாய் வல்ல<br>சக்தியாய் விளங்கிடுவாய்<br>சகலமுமே ஆன உன்னைப்<br>பக்தியாய்ப் போற்று மெந்தன்<br>பயமெல்லாம் போக்கி நீ<br>சக்தியைத் தருவாய் என்றுஞ்<br>சஞ்சலந் தீர்த்திடுவாய்!

— நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்

# "அதிகளவு சிங்களமக்கள் குடியேறிவிட்டதால் வெளியேற்றுவது கஷ்டம் என்று இராணுவ அதிகாரிகள் கூறினர்'

## வடமுனை பிரச்னைபற்றி அமைச்சர் 'தேவா'

(மட்டக்களப்பு)

''வடமுனை அத்துமீறிக் குடியேற்றப் பிரச்னையை மூலகாரணமாகவைத்து மீண்டும் இந்த நாட்டில் ஒரு இனக்கலவரம் ஏற்படக்கூடாது என்பதற்காகவும், இப்பிரச்னையின் பின் விளைவையிட்டு சிந்தித்துமே இதுவிடயமாக நான் பொறுமையைக் கடைப்பிடிக்கிறேன் இருப்பினும் வடமுனை அத்துமீறல் குடியேற்ற பிரச்னையை ஒரு சவாலாகவே நான் ஏற்றுள்ளேன்''

கல்குடா தொகுதி எப். பி. யும், உள்நாட்டலுவல்கள் அமைச்சருமான திரு கே. டபிள்யு. தேவநாயகம், வடமுனைப் பிரச்னை தொடர்பாக மேற்கண்டவாறு தெரிவித்தார். அமைச்சர் தேவநாயகம் மேலும் கூறியதாவது:

''நான் கல்குடா தொகுதியின் எம். பி.யாகவும் அமைச்சராகவும் இருக்கும்வரையில் இந்த அத்துமீறல் குடியேற்றத்தை ஒருபோதும் அனுமதிக்கமாட்டேன். எமது அரசியல் சாசனத்தின்படி ஒரு பிரதேசத்தில் குடியேறும் போது அந்தப் பகுதி பாராளுமன்ற உறுப்பினரின் சிபார்சுக்கு அமைய அவரது அனுமதிபெற்றே குடியேறமுடியும்.

### ஜனாதிபதியை சந்தித்தேன்.

''நான் இவ்விடயமாகஜனாதிபதியைத் தனிப்பட்ட முறையில் முதற்தடவையாகச் சந்தித்துப் பேசியபோது, ஜனாதிபதி வடமுனையில் அத்துமீறிக் குடியேறியோரைவெளியேற்றுமாறு இராணுவ அதிகாரிக்கு உத்தரவு பிறப்பித்தார் அதன்படி வடமுனைக்கு வந்த பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திரு. சேபால அட்டிகல உட்பட மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் இங்கு அதிகளவு சிங்கள மக்கள் குடியேறிவிட்டதால், அவர்களை இராணுவத்தைக்கொண்டு, வெளியேற்றுவது கஷ்டமான காரியம் என்றனர். இதுதவிர வடமுனையில், அத்துமீறிக் குடியேறி இருந்தவர்களில் ஒருபகுதியினரைக் கல்குடாத் தொகுதியிலுள்ள புணானைஎன்னும் இடத்திற்கு திசை திருப்பிவிட்டனர் இதுவே ஜனாதிபதியின் உத்தரவை அடுத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும்.

''இதுபற்றி, ஜனாதிபதியுடன் இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை நடைபெற்றபோது கூறினேன். எவ்வாறுயினும் வடமுனையில் அத்துமீறிக்குடியேறி இருப்போரை வெளியேற்றியே தீரவேண்டும் என வலியுறுத்தினேன்.

''அப்போது வடமுனையில் ஏற்கனவே தோட்டப் பகுதிகளிலிருந்து வந்து குடியேறிய இந்திய வம்சாவழியினர் இருக்கின்றனரே அவர்களுக்கு பிரஜா உரிமையும் கிடையாது அந்த மலையக மக்களையும் வடமுனையிலிருந்து வெளியேற்ற வேண்டும்'' என்று அங்குசமூகமளித்திருந்த வர்த்தக கப்பல் துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி கூறினார். இதற்கு ஜனாதிபதி'' வடமுனையில் ஏற்கனவே குடியேறியின்ள மலையக மக்களுக்கு பிரஜாஉரிமை வழங்கப்படவேண்டும். அதை நான் கொடுப்பேன்'' என்றார்.

### மலையக மக்கள்

ஜனாதிபதி தொடர்ந்து 'மலையகமக்கள் நாட்டின் ஏனைய பகுதிகளைவிட டைக்கு கிழக்கு மாகாணங்களில் குடியேறுவது பொருத்தமானதே என்றார்-

''மகாவலி அபிவிருத்தி திட்டத்தின்கீழ்வரும் பிரதேசங்களில் திட்டமிட்ட குடியேற்றங்கள் நடைபெற்றால்தான், அதன்பயனை மக்கள் அனுபவிக்கமுடியுமென அங்கு சமூகமளித்திருந்த சாணி, காணி அபிவிருத்தி மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா, ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினர். அப்படியானல் இத்தகைய குடியேற்ற திட்டங்களுக்கு பொறுப்பாக, மகாவலி அபிவிருத்தி சபைத் தலைவராக வடமுனையில் தற்போதிருக்கும் பௌத்தபிக்குவையே நியமித்தால் நல்லது என ஜனாதிபதி நகைச்சுவையாகக் கூறினர்.

### ஜனாதிபதி ஆதரவில்லை

''வடமுனையில் சிங்களவர்களின் அத்துமீறல் குடியேற்றத்திற்கு ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தன ஆதரவு அளிக்கவில்லை. இக்குடியேற்றத்திற்கு அரசாங்கம் ஆதரவு வழங்குகிறது என்ற கருத்தும் தவறனதாகும்.''

''கல்குடாத் தொகுதிதான் வடக்கு எல்லையில் வடமுனைப் பகுதி அமைந்திருக்கிறது இதனையடுத்து மாதுறுஓயா ஆறு ஒடுகிறது. வேண்டுமானல் கல்குடாத் தொகுதியின் எல்லைக்கு அப்பால், ஆற்றின் மறுபக்கத்தில் எவரும் குடியேறலாம், ஆனல் கல்குடாத் தொகுதி எல்லையினுள் என் அனுமதியின்றி அத்துமீறி குடியேறுவோரைத் தான் ஒருபோதும் அனுமதிக்கமாட்டேன்.

''வடமுனையில் அத்துமீறிக் குடியிருப்பவர்களைப் பொலநறுவா மாவட்டத்தில் வந்து குடியேறுமாறும், அங்கு போதிய இடவசதியிருப்பதாகவும் பொலநறுவா எம். பி. திரு நெல்சன் தெரிவித்துள்ளார். ஆனல் வடமுனைக் குடியேற்றத்திற்குத் தலைமை தாங்குபவர் இதை ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை.

### 1972 இல் எதிர்த்தேன்

''1972-ம் ஆண்டில் நான் எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோது. சுமார் 200 வெளிமாவட்டத்தினர் மதகுரு ஒருவரின் தலைமையில் கல்குடாத்தொகுதியிலுள்ள புனானை என்னுமிடத்தில் அத்துமீறிக் குடியேறினர். உடனடியாகத் நான் அதனை எதிர்த்து மேற்கொண்ட நடவடிக்கைகளால் அந்த அத்துமீறல் குடியேற்றம் தடுத்து நிறுத்தப்பட்டது

### திட்டமிட்ட குடியேற்றம்

''தற்போது அதே மதகுரு தலைமையில் மீண்டும் வடமுனைப் பிரதேசத்தில் திட்டமிட்ட குடியெற்றம் நடைபெறுகின்றது. இதனைத் தடுதிது நிறுத்தாமல் விடமாட்டேன்.''

''ஒரு ஜனநாயக நாட்டில் சமயமும், அரசியலும் இணைந்து செயல்பட்டாலும், சமயத்திற்கு அரசியல் கட்டுப்படமுடியாது. இதனை நமது ஜனாதிபதி நன்கு உணர்ந்திருக்கிறர் இதுவே ஜனாதிபதியின் கொள்கையுமாகும்.''

''சமயத்தை முன்வைத்தே கல்குடாத் தொகுதியில் அத்துமீறல் குடியேற்றம் நடைபெறுகிறது.''

''வடமுனைக்குச் சிலமைல் தூரத்திலுள்ள 'நிம்புலாகலா' என்னும் கற்குகைக்கோவிலில் ஒவ்வொருநாளும் ஒவ்வொரு கிராமத்தைச சேர்ந்தவர்கள் தானம் வழங்கவேண்டுமாம். அதற்காகவே இங்கு வந்துள்ளனராம்.''

''இதன்படி வருடம் முழுவதும் தானம் வழங்குவதற்காக நாட்டின் பலபாகங்களில் இருந்து 365 கிராமங்களைச் சேர்ந்த சிங்கள மக்கள் இங்கு வரவிருக்கின்றனராம். தற்போது இங்கு கேகாலை, குருநாகல், காலி. மாத்தறை, அம்பாந்தோட்டை பொலன்னறுவை, ஜயந்திபுர, கண்டி, பதுளை. பண்டாரவளை ஆகிய இடங்களிலிருந்து தானம்வழங்குவதற்காக சிங்களமக்கள் வந்துள்ளனராம். இப்படி எனக்குக் காரணம் தெரிவிக்கப்பட்டது. ஆனல் பௌத்ததானம் வழங்கும் போர்வையில் வடமுனையில் அத்துமீறிக்குடியேறுவதே இக்கூட்டத்தினரின் நோக்கமாகும். இதுபற்றி ஜனாதிபதியிடம் விளக்கமாக எடுத்துக்கூறினேன். அவரும் என் கருத்தை ஏற்றுக்கொண்டுள்ளார்.

''நான் கல்குடாத் தொகுதி எம். பி. யாகவும் அமைச்சராகவும் இருக்கும்வரை, அத்துமீறிக் குடியேறியவர்களைக் கல்குடாவுக்கு அப்பால்சென்று குடியேறவே செய்வேன்.''

---

## வெள்ளிச்சிந்தனை

(4ம் பக்கத் தொடர்ச்சி)

சகோதரம், மனைவி என்பனவற்றைப் பிரதிபலிக்கும் கிரக நிலையைக் கொண்டு ஒருவனின் சகோதரமோ, மனைவியோ அவனுக்கு எத்தகைய பயனைக் கொடுப்பதற்கான பாவ புண்ணியத்தை இயற்றியுள்ளார் என்பதை அறியலாம்.

ஒருவன் தான்செய்த தீவினை பயனிலிருந்தும் தப்ப இயலாது என்றுலும் அத்தீவினைக்குத் தீர்வு செய்தலின் மூலம் அதன் வேதனையிலிருந்தும் விடுபடலாம். ''தலைக்கு வருவது தலைப்பாகையோடு போம்'' என்பதுபோல சிறிது சிறிது குறையும்.

திருஞானசம்பந்தர் மதுரைக்குப் புறப்படும்போது கிரகங்களின் நிலை நன்றுயில்லை என்றுர் அப்பர். கிரகங்கள் அடியார்கட்குத் தீமைசெய்யா என்றுர் சம்பந்தர். அப்பர் கூறியதுபோல மதுரையில் சம்பந்தப் பெருமான் இருந்த மடத்துக்கு சமணர்கள் நெருப்பு வைத்தார்கள். அரசனைத் தம்வசப்படுத்தி சம்பந்தசுவாமிகளை நாட்டைவிட்டே கலைக்கவும் பல சூழ்ச்சிகளைச் செய்தார்கள். இப்படியான செயல்கள் உண்டானது கிரகங்களின் இயல்பையும் அவை அவருக்குத் துன்பம் செய்யாமை சம்பந்தர் சொல்லிய உண்மையையும் வலியுறுத்துகின்றன.

எனவே தம் தீவினையையும் அதனல் வரும் துன்பங்களையும் அறிந்து அந்தத் துன்பங்களிலிருந்து விடுபட முயலுபவர்கள் கிரகவழிபாட்டின் அடிப்படையையும் முறையையும் நன்கு புரிந்துகொண்டு பாவமன்னிப்பும் இறையனுக்கிரகமுமாகிய பயனைப் பெறும் வகையில் கிரகப்பிரீதியிலும் இறை வழிபாட்டிலும் முயலலாம்.

நாளாய போகாமே
நஞ்சணியும் கண்டனுக்கே
ஆளாய அன்புசெய்வோம்
மடநெஞ்சே அரன்நாமம்
கேளாய் நம்கிளை களைக்கும்
கேடுபடாத்திறமருளிக்
கோளாய நீக்குமவன்
கோளிலியெம்பெருமானே.

—திருஞானசம்பந்தர்

---

இடம்பெயர்ந்த

## துறைமுக அதிகாரசபை ஊழியருக்கு காங்கேசன் துறைமுகத்தில் வேலை?

### அரசஅதிபர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்டு வடபகுதிக்கு இடம் பெயர்ந்த இலங்கை துறைமுக அதிகார சபையைச் சேர்ந்த ஊழியர்களுக்கு காங்கேசன்துறை துறைமுகத்திற்கு இடமாற்றம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை யாழ் அரசாங்க அதிபர் மேற்கொண்டுவருகிறுர்.

இலங்கை துறைமுக அதிகாரசபையைச் சேர்ந்த 275 தமிழ் ஊழியர்கள் இடம் பெயர்ந்து வந்துள்ளதாகவும் இவர்களை காங்கேசன்துறை துறைமுகத்தில் பணியாற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தருமாறும் பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்புக்குழுவினர் யாழ். அரசாங்க அதிபரையும் துறைமுக அதிகார சபைத்தலைவர் திரு விமல் அமரசேகராவையும் கேட்டிருந்தனர்.

இடப்பெயர்ந்த அரச, கூட்டுத்தாபன ஊழியர்களை அவர்களது சொந்த மாவட்டங்களில் உள்ள திணைக்கள கூட்டுத்தாபன அலுவலகங்களில் உள்ள காலியான இடங்களில் அமர்த்துவது தொடர்பாக யாழ் அரசாங்க அதிபர் கூட்டிய மகாநாட்டில் இது குறித்து ஆராயப்பட்டது.

(மா)

---

## அணிவோரைக் ...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

உள்நாக்கினைச் சித்திர கண்டாதேவியும், தாடைகளை மகாமாயையும், முகவாய்க் கட்டையைக் காமாக்ஷிதேவியும் காக்க; என் வாக்கினைச் சர்வமங்களாதேவி காக்க.

கழுத்தினைப் பத்ரகாளி காக்க; முதுகெலும்பினைத் தனுர்த்தரீதேவி காக்க, கழுத்தின் வெளியே நீலக்கிரீவா தேவி காக்க; கழுத்தெலும்பை நளகூபரீதேவி காப்பாற்றுக.

இரு தோழ்களையும் கட்க தாரிணியும், இரு புயங்களை வஜ்ரதாரிணியும், கைகளை தண்டினியும், விரல்களில் அம்பிகையும் இருந்து காக்க. நகங்களைச் சூலேச்வரி காக்க; கஷ்டங்களை அனலேசுவரி காக்க; மார்பகங்களை மகாதேவி காக்க, மனதைச் சோக விநாசினிகாக்க இதயத்ினை லலிதாதேவி காக்க, வயிற்றினைச் சூலதாரிணி காக்க நாபியைக் காமினீதேவி காக்க, ரகஸ்யமான உயிர்நிலையைக் குஹ்யேஸ்வரி காக்கட்டும்.

பூதநாதாதேவி உபஸ்தத்தைக் காக்க, மஹிஷவாஹினி அபானத்துவாரத்தைக் காக்க. இடுப்பில் பகவதி காக்க முழங்கால்களை விந்திய வாஸினி காக்கட்டும்.

துடைகளை மகாபலாதேவி காக்க, முழங்கால் நடுவில் விநாயசீதேவி காக்க. கணுக்கால்களை நாரசிம்மீதேவீ காக்க பின்னங்கால்களில் மிதௌஜஸீ காக்க.

கால் விரல்களை ஸ்ரீதரி காக்க, கேசங்களை ஊர்த்துவ கேசினியும், மயிர்க் கால்களில் கௌபேரியும் காத்திடுக தோலை வாகீச்வரி காக்க, இரத்தம், வீரியம், கொழுப்பு, மாமிசம், எலும்பு, மூளை, அனைத்தையும் பார்வதிதேவி காப்பாற்றுக.

குடல்களைக் காலராத்திரி காக்க. பித்ததாதுவை முகுடேசுவரி காக்க, ஆதாரக் கமலங்களைப் பத்மாவதி காக்க கபதாதுவைச் சூடாமணி காக்க.

நகங்களின் ஒளியை ஜ்வாலாமுகி காக்க, எல்லாப் பூட்டுக்களிலும் அபேத்யாதேவி காத்திடுக. பிரம்மாணி தேவியே! எனது சுக்லத்தைக் காப்பாய் சத்ரேச்வரீதேவீ! எனது நிழலினைக் காப்பாய்; தர்மசாரிணீ! எனது அகங்காரத்தையும், மனதையும், புத்தியையும் காப்பாய்! தேவியே! பிராணனையும், அபானனையும், வியானனையும், ஸமானனையும், உதானனையும் நீகாப்பாய்! சக்ரீணீதேவீ! எனது புகழையும், கீர்த்தியையும், அழகினையும் நீ எப்போதும் காப்பாயாக!

இந்திராணி! எனது கோத்திரத்தைக் காப்பாற்றுவாய்! சண்டிகே! எமது பசுக்களையும், உடைமைகளையும் காப்பாற்றுவாய்!

மகாலட்சுமி! எங்கள் மக்களைக் காப்பாயாக! பைரவி தேவி துணையைக் காத்திடுக! சேஷமங்கரீ பாதையைக் காக்க. விஜயாசக்தி எல்லாப் புறத்திலுமிருந்து எங்கும் காத்திடுக; தேவீ! எந்த இடம் கவசமில்லாமல் உள்ளதோ அதை எல்லாம் ஜயந்தி என்றும் பாபநாசினீ என்றும் பெயர் பெற்ற நீ காத்திடுக!

ஓம் சக்தி, ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம்.

வெற்றியைத் தருபவளும், வீரர்குல தெய்வமுமாகிய அன்னை மகாசக்தியின் இந்தக் கவசத்தைத் தினந்தோறும் பாராயணம் செய்து அணிந்து கொள்ளும் மனிதர்களுக்கு ஜெயமுண்டு பயமில்லை;

''உலகில் எப்போதெல்லாம் நானே தோன்றி, நல்லவர்களைக் காப்பதற்காகத் தீயவர்களைத் துடைப்பேன்'' என அம்பிகை வாக்களித்திருக்கிறுள். எனவே ஆதாரம் சக்தி என்று அவளைச் சரணடைவோம். அவள் நமது குறைகள் எல்லாம் தீர்த்துக் கோடி நலம் தந்திடுவாள்.

எம்முயிர் ஆசைகளும் எங்கள்
இசைகளும் செயல்களும் துணிவுகளும்
செம்மையுற்றிட அருள்வாய்; நின்றன்
சேவடி அடைக்கலம் புகுந்து விட்டோம்,
மும்மையின் உடைமைகளும் திரு
முன்னரிட்டஞ்சலி செய்து நிற்போம்
அம்மைநற் சிவசக்தீ! எமை
அமரர்தம் நிலையினில் ஆக்கிடுவாய்

---

## பரு. — திருகோணமலை பஸ்சேவை மீண்டும் ஆரம்பம்

(சுண்டிக்குளி)

பருத்தித்துறையிலிருந்து திருகோணமலைக்கு நடைபெற்ற இ. போ. ச. பஸ்சேவை வன்செயல்களினலும், வடபகுதி பஸ்கள் சில கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டதா

(7-ம் பக்கம் பார்க்க)

# பெற்ரேல் நிலையத்தில் கொள்ளை முயற்சி தோல்வி

(மாவிட்டபுரம்)

சித்தன்கேணி பெற்ரேல் நிலையத்தில் துப்பாக்கி இளைஞர்களால் மேற்கொள்ளப்பட்ட கொள்ளை முயற்சி தோல்வியடைந்துள்ளது.

இப்பெற்ரேல் நிலைய பொறுப்பாளர் மார்க்கண்டு சக்திவேலை மோட்டார் சைக்கிளில் வந்த மூன்று இளைஞர்கள் துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தி அவரிடமிருந்த பணத்தைக் கொள்ளையடிக்க முயன்றனர்.

பெற்ரேல் நிலையப்பொறுப்பாளர் இளைஞர்களுடன் மல்லுக்கட்டி பணத்தைப் பறிகொடுக்காது பாதுகாத்துக் கொண்டார். இதனால் இவர் சிறுகாயங்களுக்குள்ளானார்.

இக்கொள்ளை முயற்சி தோல்வியடையவே இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் தப்பியோடியதாகத் தெரிவிக்கப்பட்டது. கொள்ளையர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளின் இலக்கம் 86 ஸ்ரீ 9296 என்று தெரிவிக்கப்பட்டது.

கொள்ளையர்கள் தப்பிச் சென்ற மோட்டார் சைக்கிள் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரிக்கு முன்பாக விபத்தில் சிக்கியதாகவும். அவர்கள் அந்த இடத்திலேயேமோட்டார்சைக்கிளை கைவிட்டு, அவ்வழியால் வந்த வேறுஒருவரின் சைக்கிளைப்பறித்துக்கொண்டு தப்பியோடிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த மோட்டார் சைக்கிளை பொலிசார் கைப்பற்றி காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் வைத்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது. பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

## "பக்தியே கலைப்பணிக்கு காரணம்"

(யாழ்ப்பாணம்)

கலாபவனத்தினர் நடனத்தையும்வீணைஇசையையும்சாவகச்சேரியில் பயிற்ற முன்வந்திருப்பது இப்பகுதி மக்களுக்கு கிடைத்த பாக்கியமாகும். இவற்றைப்பயிற்றுவோர், பயில்வோர், அனுபவிப்போர் தம்வாழ்வில் இறையருள் பெற்று வாழ்வெய்துவர்.

சாவகச்சேரி கலாபவன நிலையத்தில் வீணை, நடன வகுப்புகளை ஆரம்பித்துவைத்துப் பேசிய இசைப்புலவர் சி. செல்லத்துரை மேற்கண்டவாறு கூறினார்.

கலவரத்தின் போது வீணைகளும், நடனஉடைகள் யாவும் எரிக்கப்பட்டபோதும் செல்வி ரேணுகா ராசரத்தினமும். செல்வி நிரஞ்சலா ராசரத்தினமும் மனம்குன்ருது தங்கள் பணியைத் தொடர்த்து இங்கு ஆரம்பித்திருப்பது அவர்கள் கலைமீதுள்ளபக்தியையே எடுத்துக்காட்டுவதாகவும் அவர் தெரிவித்தார். (க)

# உடுப்புக்கள் கிடைக்காத அகதிகள் முறைப்பாடு

(பண்டத்தரிப்பு)

வலிதென் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கலவரங்களினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்து வந்த அகதிகளுக்கென வழங்கப்பட்ட இலவச உடைகள் தமக்கு கிடைக்கவில்லை என்று பல அகதிகள் குறையிட்டுள்ளனர்.

சண்டிலிப்பாயிலுள்ள வலிதென் மேற்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு 'படைஎடுத்து' அங்குள்ள அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்த இந்த அகதிகள்; பாதிக்கப்பட்டு வந்துள்ள தங்களுக்கு இந்த உடைப்பார்சல்கள் வழங்கப்படவில்லை என்றும் இதுபற்றி விசாரணை நடாத்தப்பட வேண்டும் என்றும் முறையிட்டனர். கலவரங்களில் பாதிக்கப்பட்டு அகதிகளாக இங்கு வந்துள்ள சகலருக்கும் வழங்குவதற்கு போதுமான உடைப்பார்சல்களை செஞ்சிலுவைச் சங்கத்தினர் கையளிக்கவில்லை என்றும் இதனாலேயே ஒரு குறிப்பிட்ட தொகையினருக்கு உடைப்பார்சல்களை வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும், இனிமேல் செஞ்சிலுவைச் சங்கத்தினரின் உடைகள் கிடைக்கும் பட்சத்தில் ஏனைய அகதிகளுக்கும் வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்றும் அங்கு தெரிவிக்கப்பட்டதாம். (கு)

வெளிநாடு செல்வதற்கு

- விமான டிக்கட்
- அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை(வங்கியின் கட்டணத்தில்)
- விமான ஆசனப் பதிவுகள்

மற்றும் உங்கள் சகல பிரயாண தேவைகளுக்கும்

(Passport, Visa எந்த ஒரு நாட்டுக்கும் எடுத்துக்கொடுக்கப்படமாட்டாது இதுசம்பந்தமான படிவங்களும் (Application Forms) எம்மிடம் இல்லை)

இன்றே நாடுங்கள்

மக்கினேன் டிரவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(Zambian Airways பிரதான விற்பனைப் பிரதிநிதி)

GENERAL SALES AGENTS

த. பெ. எண்: 92 போன்: 24154

# அஞ்சலி



## டக்ரர் த. ச. சிவஞானம்

நான் யாழ்ப்பாண நீதிமன்றத்தில் நீதவானக பதவியேற்ற காலதில் மருந்து வாங்குவதற்கென்று ஒரு நாள் 'பரணி மருந்துச்சாலை'யை அடைந்தபோதுதான் முதன் முறையாக டக்ரர் சிவஞானத்தை சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. மருந்தை மாத்திரமன்றி, நோயாளியின் குணநலனை விசாரித்து, ஆறுதல் மொழிகளும் அளித்த அவரை குறுகிய காலத்துக்குத்தான் அறிந்திருந்தபோதும், அதுமுதல் நான் அங்குபோகும் பொழுதெல்லாம், கண்ட ஒரே காட்சி இதுவே. இப்பண்பின் இரகசியத்தை அறிந்தபோது தான் டக்ரர் த. ச. சிவஞானத்தின் உண்மையான அறிவையும் அநுபவத்தையும் திறமையையும் அறியமுடிந்தது.

1946ல் கொழும்பு மருத்துவக் கல்லூரியில் கல்விகற்று R. M. P. பதவியைப் பெற்று 15 வருடங்களுக்கு அரசாங்க சேவை புரிந்த அநுபவமும் இளைப்பாறியபின் ஆயுள்வேதக் கல்லூரியில் பெற்ற தேர்ச்சியும் அவரை ஆங்கில வைத்தியத்தில் மாத்திரமன்றிஆயுள்வேத வைத்தியத்திலும் சிறப்படையச் செய்தது.

டக்ரர் க. ச. சிவஞானம் அவர்கள் தான் பெற்ற அறிவையும் அநுபவத்தையும் கொண்டு மக்களுக்காக அரும் பெரும் பணியாற்றினார் என்று அறிய முடிந்தது. இத்தகைய இளகிய நெஞ்சம் படைத்தவரும் சிறந்த ஈகையாளராகவும் தோன்றிய டக்ரர் க. ச. சிவஞானம் அவர்கள் இரவுபகல் பராமல் உழைத்து வைத்திய சேவையின் குறிக்கோள்களை நிறைவேற்றும் முகமாக ஆயிரக்கணக்கான மக்களுக்கு உதவினார்.

எளியோர், பெரியோர், வறியவர், செல்வந்தர்,' படித்தவர், படிக்காதோர் என்ற வேறுபாடு காட்டாது, தனது ஆழ்ந்த அநுபவத்தையும் அச்சேவையின் நன்மதிப்பையும் தன் வாழ்நாளில் இறுதிவரைக்கும் நிலைநாட்டினார்.

'பரணி மருந்துச்சாலை' இரவில் பூட்டும் நேரத்தில் யாரும் அங்கு சென்ருல் அவரோடுஅவரது முழுக்குடும்பத்தினரையும் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும். அவர் ஒழுக்கமான, திறமையான, நேர்மையான கட்டுப்பாட்டுக்குள் அம்மருந்துச்சாலையை நடாத்தினார். அவரது பிள்ளைகள் தந்தையின் குறிக்கோளை அவ்வாறே நிறைவேற்றி வருவதைக் கண்டு மகிழ்ச்சியடைந்திருக்கிறேன்.

இன்று அவரை அம்மருந்துச்சாலையில் பார்க்க முடியாது போனாலும், அதே மக்கள் அன்றுபோல் அவரது பிள்ளைகளின் உள்ளங்களை இன்றும் கவர்ந்திருப்பதால், மறைந்த டக்ரர் க. ச. சிவஞானம் அவர்கள் மறைமுகமாக அங்கு வந்திருக்கிருரோ என்ற எண்ணமே ஏற்படுகின்றது. அன்னரது மறைவு அவரது குடும்பத்தினருக்கு மட்டுமன்றி அவரை நாடி வரும் எத்தனையோ மக்ளுக்கு ஒரு பேரிழப்பாகவே அமைந்துவிட்டது.

தே. ஜோகநாதன்

# மன்னர் செய்திகள்

### மீன்பிடிவள்ள இயக்குநர் பயிற்சி

மீன்பிடிவள்ள இயக்குநர் பயிற்சி நெறிக்கான விண்ணப்பம் தமிழில் வெளியிடப்பட்டுள்ளது.

இவ்விண்ணப்பப்படிவங்களை யாழ். கடல் தொழில் பயிற்சி நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாமெனக் கடல் தொழில் அமைச்சின் செயலாளர் திரு. அனுராவீரரத்தின அறிவித்துள்ளார்.

### பிரயாணிகள் தொகை அதிகரிப்பு

தலைமன்னர் துறைமுகத்திலிருந்து கப்பல் மார்க்கமாக இந்தியாவுக்குச் செல்லும் பிரயாணிகளின் தொகை மீண்டும் அதிகரித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை தலைமன்னர் துறைமுகத்திலிருந்து 999 பிரயாணிகள் கப்பல்மார்க்கமாக இந்தியாவுக்குச் சென்றனர்.

இவர்களில் 534பேர் தாயகம் திரும்பும் இந்தியவம்சாவழியினராவர்.

ஏனையோர் இலங்கைப் பிர பிரயாணிகளாவர்.

### மாவட்ட அலுவலகம் அமைக்கும் வேலைகள்

ஏற்கனவே இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த மன்னர் மாவட்ட ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தித்திட்டத்தின் மாவட்ட அலுவலகம் அமைக்கும் வேலை மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சுமார் 18 லட்ச ரூபா செலவில் அமைக்கப்படும் இவ்வலுவலகம் அமைக்கும் வேலையை இவ்வருடம் பூர்த்தி செய்யுமாறு திட்டமிடல் அமைச்சின் மேலதிகசெயலாளர் திரு. எஸ். குணசிங்கம் பணித்துள்ளார்.

இதனையடுத்தே மன்னர் மாவட்ட ஒன்றிணைந்த கிராமிய அபிவிருத்தித்திட்டத்தின் மாவட்ட அலுவலகம் அமைக்கும் வேலைகள் துரிதமாக நடைபெற்றுவருகின்றன.

### பாற்பண்ணை கூட்டுறவுச்சங்கம்

மன்னர் மாவட்டத்தில் பாற்பண்ணை அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் ஒன்றை விரைவில் அமைப்பதற்கான நடவடிக்கைகளை மன்னர் கூட்டுறவு உதவி ஆணையாளர் ஜனப் எம். சி. எம். இக்பால் மேற்கொண்டு வருகிருர்.

இதற்கு முன்னேடியாக மன்னர் மாவட்ட பாற்பண்ணை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்கான உப - விதிகள் தயாரிக்கப்பட்டு அனுமதிபெறுவதற்காகக் கூட்டுறவு ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### மேசன்வேலை பயிற்சி வகுப்புகள்

மன்னர் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள பெண்களுக்கான மேசன்வேலை, தச்சுவேலை, மின்சார இணைப்பு வேலை போன்றவற்றிற்கான பயிற்சி வகுப்பில் சேர்ந்து கொள்வதற்கு எதிர்பார்க்காத அளவுக்குப் பெருந்தொகையான விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மூன்று மாதங்கள் நடைபெறும் இப்பயிற்சி வகுப்பில் சேரும் பெண்களுக்குப் பயிற்சியின்போது வேதனமும் வழங்கப்படும்.

பயிற்சி முடிவில் சான்றிதழ்களும், வேலைசெய்வதற்கான உபகரணங்களும், வேலையை ஆரம்பிப்பதற்கெனச் சிறு கடனுதவியும் வழங்கப்படும்.

### விளையாட்டு மைதான வேலைகள்

மன்னர்-தாராபுர அல்மின மகாவித்தியாலயத்திற்கான விளையாட்டு மைதானம் நிர்மாணிக்கும் வேலைகள் வித்தியாலய அதிபர் ஜனப் எச். சித்திக் மேற்பார்வையில்நடைபெற்றுவருகிறது.

இவ்வேலைக்கென மன்னர் கல்வித்திணைக்களம் 35 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது.

### ரூ. 50,000 செலவில் புதிய கட்டிடம்

மன்னர் பால்சேகரிப்பு, விற்பனை நிலையத்தை நவீனமயமாக்கும் பொருட்டு 50ஆயிரம் ரூபா செலவில் புதிய கட்டிடம் ஒன்று விரைவில் அமைக்கப்படும்.

புதிய கட்டிடத்தை அமைப்பதற்கான நிதியை மன்னர் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசன் பன்முகவரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்துள்ளார்.

புதிதாக அமைக்கப்படும் கட்டிடத்தில் பால் அருந்த வருவோர் அமர்ந்திருந்து பால் வதற்கான வசதிகள் ஏற்படுத்தப்படும்.

# யாழ். சிறையில் போதிய பாதுகாப்பு ஊழியர் இல்லை

## கைதிகள் தப்பி ஓடுவதற்கு இதுவே காரணமாம்

(யாழ்ப்பாணம்)

'யாழ் சிறைச்சாலையிலிருந்து அடிக்கடி சிறைக்கைதிகள் தப்பி ஓடுவதற்குப் போதிய சிறைச்சாலை பாதுகாப்பு ஊழியர்கள் இல்லாமையே காரணமாகும் என சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாண்டு இன்றுவரை இச்சிறைச்சாலையிலிருந்து கொள்ளை, கொலைச்சம்பவங்களுக்காக சிறைவைக்கப்பட்டிருந்த 21 கைதிகள் தப்பி ஓடியுள்ளனர் என்றும் / போதிய சிறைக்காவலர்கள் அங்கு இருந்திருந்தால் இவர்களைத் தடுத்திருக்கமுடியும் என்றும் அவர் கூறினார்.

கடந்த ஜூலை மாதம் சிறையிலிருந்து தப்பியோட முயற்சித்த எட்டு கைதிகளில் 5 பேர் துப்பாக்கியால் சுடப்பட்டு மரணமானதும் மூவர் தப்பி ஓடியதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த மாதம் 2-ம் திகதி இச்சிறையிலிருந்து 12 பேர் தப்பியோடினர். இம்மாதம் 2-ம் திகதியும் 6 பேர் சிறையிலிருந்து தப்பியுள்ளனர்.

தற்போது யாழ். சிறையில் விளக்கமறியல் கைதிகள் உட்பட 300 கைதிகள் சிறை வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்குப் பாதுகாப்பாக 35 சிறைப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களே கடமையாற்றி வருகின்றனர். இவர்களுடன் முன்பு கடமையாற்றிய 100 சிங்கள பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இனக்கலவரங்களை அடுத்து இடம் பெயர்ந்து தென்னிலங்கை சென்ற பின்னர் அவர்களின் இடத்திற்கு புதிதாக எவரும் அனுப்பப்படவில்லை. தென்னிலங்கைக்கு இடம் பெயர்ந்து சென்றவர்கள் தொடர்ந்து சுகவீனலீவில் நிற்கின்றனர் என்றும் அந்த உத்தியோகத்தர் தெரிவித்தார். (மா)

**ராஜா** (யாழ்நகர்)
10-30, 2-30, 6-00
பாக்கியராஜ்—அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
**அந்த 7 நாட்கள்**
(கலர்)

**[illegible]ரன்** (யாழ்.நகர்)
காலை 10-30, 2-30, 6-30
சிவாஜி-சரிதா
[illegible]
**துணை**
(கலர்)

**ராணி** (யாழ். நகர்)
10-30 2-30 6-15
கமலஹாசன் - அம்பிகா
**சகலகலா வல்லவன்**

**லதா** (கோண்டாவில்)
தினசரி 2-30, 6-30
எம்.ஜி.ஆர். - ஜெயலிதா
**தேடிவந்த மாப்பிள்ளை**

**மனோகரா**
(யாழ்நகர்)
10-30, 2-15, 4-45.
7-00 p. m.
Captain Coronos
VAMPIRE HUNTER
(action film-color)

**வின்ஸர்** (யாழ் நகர்)
தினசரி 3 காட்சிகள்
எம்.ஜி.ஆர். சரோஜாதேவி
**பெரிய இடத்து பெண்**
8th to 11th
Sean Connery in
BRIDGE TOO FAR
(War Film)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
10-30, 2-00, 4-30, 6-45
Bruce Lee in
**ENTER THE DRAGON**
புரூஸ் லீ நடித்த
என்டர் த ட்ரகன்
Next :
IT COULD HAPPEN TO YOU
(A Film on V. D.)

**லிடோ** (யாழ். நகர்)
தினசரி
10-30, 2-15, 6-30,
**விடியும்வரை காத்திரு**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
Daily 10-30 a.m. 2-15
4-45 and 7-00 p. m.
Robert Shaw in
FORCE 10 FROM NAVARONE
(Action Packed)

**றீகல்** 6th to 10th (யாழ். நகர்)
Daily: 10-30 a.m., 2-30, 4-45, 7-00 p.m.
Christopher Walken in
**Dogs of War**
WAR FILM—COLOR
இராணுவத்தினரால் சிறைப்பிடிக்கப்பட்டு சித்திரவதைகளுக்குள்ளாகி வெளியேற்றப்படும் அவன் சில நண்பர்களைச் சேர்த்து, நவீன ஆயுதங்களையும் சேகரித்து இராணுவ முகாமையே நிர்மூலமாக்குகிருன்.


# இன்றைய பலன்

**புரட்டாதி 21-ம் திகதி
வெள்ளிக்கிழமை
(7-10-83)**

மேடம்: வெற்றி உமது அருகில் விரைந்து வரும் எதிர்த்தவர்களே ஆதரவு தருவதற்கு முன்வருவார்கள் சகோதரத்திற்கு திடீர்த் திருமணம்ஒன்று நடைபெறும்.

இடபம்: எக்கருமத்தையும் எண்ணித்துணிக அருமையான சந்தர்ப்பமொன்று இன்று கோட்டைவிடக் கூடும் வணிகர்கள் இன்று முதலீட்டைத் தவிர்க்கவும் இரும்புத்திரை தொங்கவிடப்படும்.

மிதுனம்: உறவு முறைகள் பலப்படும் உற்சாகம் பெருகும் புதிய நண்பர்கள் புடைசூழ்வார்கள் இரக்க சிந்தை மேலோங்கி நிற்கும் பொதுப் பணியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

கடகம்: வித்தையில் வெற்றி காணுவீர் வேண்டியது கிடைக்கும் தொழில் மாற்றம்அல்லது இருப்பிடமாற்றத்துக்கு வழிகோலப்படலாம் வேதாந்த விவகாரங்களில் ஈடுபடுவீர்கள்.

சிங்கம்: மெத்தவும் பொருள் சேரும் மேலிடத்து ஆதரவும் தப்பாமல் கிடைக்கும் தித்திக்கும் செய்தியுடன் தேனுனை வாழ்வும் கிட்டும் விஞ்ஞானத் துறையில் வெற்றியுண்டு.

கன்னி: குறுக்கு வழியில் இறங்குவதால் சட்டத்தின்பிடியில் மாட்டிக்கொள்வீர் திரைமறைவில் உங்கள் நடவடிக்கை கண்காணிக்கப்படும் காணிப் பிணக்குண்டு.

துலாம்: அவசர புத்தியினுல் விபரீதங்கள் விளையும் எண்ணங்கள் ஆயிரம் சிந்தையில் வந்து உந்தும் விந்தையான போக்கு வேடிக்கை காட்டும் கோபத்தை அடக்கின் நிலைமை சீரடையும்.

விருச்சிகம்: பேச்சு வன்மையினுல் பெரும் புகழ் சேரும் நிதியில் அபிவிருத்தி உண்டு பூர்வீகச் சொத்தொன்று உமக்குக் கிடைக்கும் பூமிப்பிணக்கு இன்று நிவர்த்தியாகும் இலாபகரமான தினம்.

தனு: தற்பெருமை மூலம் தடுமாற்றம் ஏற்படும் கண்துடைப்பு வேலை நடக்கும் கவனம் செலுத்தவும் அதிக நம்பிக்கையின் மூலம் ஆபத்தைத் தேடிக்கொள்ள நேரிடலாம்.

மகரம்: வாகனச் சாரதிகளுக்கு இன்று சிறப்பானதினம் வரவிலும் திருப்திகாணப்படலாம் தாய்வழி மூலம் சிலருக்கு தனலாபமும் கிடைக்கலாம் அறிஞர்களின் தொடர்புகளும் ஏற்படும்.

கும்பம்: உள்ளம் இன்பத்தால் துள்ளும் புதிய நண்பர்களின் சேர்க்கை கிடைக்கும் நீண்டநாள் பிணி நிவர்த்தியாகும் பிள்ளை ஒன்றின் கல்வி முன்னேற்றம் மகிழ்ச்சியைத் தரும்.

மீனம்; வயதுமுதிர்ந்தபெண் ஒருத்தியால் அவப்பெயருக்கு இடமுண்டு அடுத்தவரை நம்புவதால் ஆபத்து மிகவுண்டு.

**சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை**

## லெபனுனுக்கு...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

குறைக்கப்பட வேண்டுமென்றும் தெரிவித்துள்ளார்.

லெபனுனில் சமய சார்பற்ற தன்மை நிலவவேண்டுமென்றும் சகல மதத்தவருக்கும் நியாயமான முறையில் பல்வேறு அதிகாரங்களும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்

இதேசமயம் லெபனுனில் சில இடங்களில் போர் நிறுத்தம் மீறப்பட்டுள்ளது என்றும் தென் லெபனுனிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் நேற்று துப்பாக்கிச் சண்டைகள் இடம் பெற்றன என்றும் இஸ்ரேலியப்படைகள் தமது நிலைகள் சிலவற்றிலிருந்து வெளியேறி வருவதாகவும் தெரிவிக்கப் பட்டது. (கி)

## பெண்ணினம்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பலர் தமது வாழ்க்கையை இடைநடுவிலெயே முடித்துக் கொள்கின்றனர் எனவே அவர்கள் மீதான வரதட்சணைக் கொடுமைகள் ஒழிக்கப்பட வேண்டும்.

### கோஷிப்பதுடன் நின்றுவிடக்கூடாது

வரதட்சணைக் கொடுமைக்கெதிராக கோஷமெழுப்புவதோடு மட்டும் ஆண்கள் இருந்துவிடக்கூடாது வரதட்சணை பெறமாட்டோம் என்று அவர்கள் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்.

வரதட்சணை பெறும் ஆண்கள் பற்றி பத்திரிகைகளில் வெளியிட்டு அவர்களின் நடவடிக்கைகளை கடுமையாக விமர்சிக்கவேண்டும் என்ருர்'.

அவர் மேலும் விஞ்ஞான தொழில் நுட்பம் அளவுக்கு மிஞ்சியதாகவிருந்தால் மனிதகுலத்துக்கு கேடு விளையும். தகவல் தொடர்பு சாதனங்களின் வளர்ச்சி மேலும் விரிவாக்கப்பட்டு கிராமப்புறங்களிலுள்ளவர்கள் புதிய விடயங்களை உடனடியாக அறிந்து கொள்ள வசதிகள் செய்யப்பட வேண்டும் என்ருர். (கி]


**சாந்தி** யாழ்நகர்
10-30, 2-30, 6-30
சிவாஜி - மஞ்சுளா
**உத்தமன்**
(புதிய பிரதி)


## மின்சாரம் பெறமுடியாது அகதிகள் கஷ்டம்

(சுண்டிக்குளி)

வடக்கே அகதிளாக வந்து தமது சொந்த வீடுகளில் குடியிருப்பவர்கள் அவ்வீடுகளுக்கு மின்சார இணைப்புபெற தமது பகுதியிலுள்ள யாழ். அபிவிருத்திச்சபை உபஅலுவலகங்களுக்கு விண்ணப்பித்தனர். ஆனுல் அவர்கள் எவ்வளவு காலம் ஆதனவரி கட்டியது வசித்தது போன்ற விபரங்கள் கேட்கப்படுகின்றனர். இதனுல் இந்த அகதிகள் தமது வீடுகளுக்கு மின்சாரம் பெறமுடியாது கஷ்டப்படவேண்டியுள்ளனர்.

## கிழக்குத் தைமூர் மக்கள் எதிர்காலம்

லண்டன், அக். 6

''கிழக்குத் தைமூர்மக்களின் நிலையான எதிர்கால நல்வாழ்வுக்காக இந்தோனேசியாவும் போர்த்துக்கல்லும் கலந்தாலோசிக்கவேண்டும்'' என ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் பென்ஸ்வேகர்கோரியுள்ளார்.

1965க்கு முன்னர் போர்த்துக்கல்லின் ஆட்சிக்குட்பட்டிருந்த கிழக்குத் தைமூர் மக்கள் விடுதலையடைந்த பின்னர் இந்தோனேசியா ராணுவம் படையெடுத்து தற்பொழுது அதன் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறப் போராடிவருவது குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேல்....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதான எதிர்க்கட்சியான தொழில்கட்சியையும்இணைத்து ஒரு கூட்டணி அரசாங்கமொன்றை அமைக்கவே திரு ஷமீர் பாடுபட்டார். ஆனுல் அம்முயற்சி தோல்வியடைந்தது. திங்கட்கிழமையே புதிய அமைச்சரவை விபரங்களை திரு ஷமீர் அறிவிப்பார் என்று தெரிவிக்கப்பட்டது.

(கி)

## ஹெல்மட்கோல் மத்திய கிழக்கு விஜயம்!

அம்மான் அக் 6

மெற்கு ஜெர்மன் அதிபர் திரு. ஹெல்மட் கோல் மத்திய கிழக்குக்கான ஏழு நாட்கள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று ஜோர்தான் வந்து சேர்ந்தார்.

ஜோர்தான் மன்னர் ஹுசைன் இவரைக் கௌரவித்து நேற்று விருந்துபசாரமொன்றை நடத்தினுர். அவ்விருந்தில் மன்னர் ஹுசைன் ஈராக் - ஈரான் போர் நிறுத்தப்படவேண்டுமென்றும் மேற்கு நாடுகள் இந்த யுத்த நிறுத்தத்துக்கு உதவவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

திரு ஹெல்மட்கோல் மத்திய கிழக்கு விஜயத்தின்போது சவூதி அரேபியா, எகிப்து ஆகிய நாடுகளுக்கும் பயணஞ் செய்வார். (கி)

## பரு.-திருகோண...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

லும் இடை நிறுத்தப்பட்டிருந்தது.

இச்சேவை மீண்டும் இம் மாதம்முதல் ஆரம்பமாகியுள்ளது. கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச்சபை இதை நடாத்துகிறது. திருமலையில் இருந்து பருத்தித்துறைக்கு புதியபஸ்சேவை ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முல்லைத்தீவில்இருந்து பருத்தித்துறைக்கு நடைபெறும் பஸ்சேவையும் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

## சண்டிலிப்பாய் 'எஸ். பி. கோ.' கழகம் வெற்றி

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் 'எஸ். பி. கோ' விளையாட்டுக் கழகத்திற்கும் பண்டத்தரிப்பு ஐக்கிய விளையாட்டுக் கழகத்திக்கும் இடையே நடைபெற்ற சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் சண்டிலிப்பாய் 'எஸ். பி. கோ' விளையாட்டுக் கழகம் 4:0 என்ற கோல்களால் வெற்றியீட்டியது.

'எஸ்.பி.கோ' கழகத்தைச் சேர்ந்த பிரதாபன், மங்களேஸ்வரன்சிறப்பாக விளையாடினர். பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி மைமானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. ச. கணேஷ் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர். (வெ)


**கட்டிட தொழில் நுட்பவியல் நிறுவனம்**
136, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
6 மாதப் பயிற்சிகள்—ஆரம்பம் 07-10-83
காலை 8-30
1. DIPLOMA IN DRAUGHTSMANSHIP
2. DIPLOMA IN QUANTITY SURVEYING
3. DIPLOMA IN SURVEYING AND LEVELLING
(9072)

அன்ரனி காமன்ஸ் – கரவெட்டி
பெண்பிள்ளைகள்
**தையல் வேலைக்குத் தேவை**
யாழ்ப்பாணத்திற்கு மாற்றலாகியுள்ள நீர்கொழும்பில் இயங்கிவந்த பெரிய அளவிலான "றேடிமேட்" தையல் தொழில் நிலையத்திற்கு போதிய அனுபவம் வாய்ந்த பெண் பிள்ளைகள் 50 பேருக்கு மேல் தேவை.
விஞ்ஞான முறையிலான துணி வெட்டுதலில் மிகத் திறமை வாய்ந்த பெண் பிள்ளைகளும் அநேகர் தேவை.
10-10-83 திங்கள் தொடக்கம் 15-10-83 சனிக்கிழமை வரை தினசரி காலை 9-30 மணி தொடக்கம் பி. ப. 4 மணி வரையும் கீழ்க்காணும் முகவரிக்கு சான்றுப்பத்திரங்களுடன் நேரில் வரவும்.
**அன்ரனி காமன்ஸ்**
''ராஜஸ்தான்''.
(தபால் நிலையம் முன்பாக), கொடிகாமம் வீதி,
நெல்லியடி, கரவெட்டி
(9114)

**UDUVIL GIRLS' COLLEGE**
COURSE IN
**Computer Programming & Data Processing**
COMMENCING 1ST NOVEMBER 1983
COURSE OVERVIEW:-
Part I:- (a) Introduction to Computing and Data Processing.
(b) Programming Logic and Concepts.
Part II:- (a) Programming in BASIC Language
(b) Practicals.
Part III:- Programming: FORTRAN/RPG II/COBOL Language.
COURSE TIME: WEEK DAYS
9-00-12-00 noon and 2-00-4-00 p.m.
Duration: 4 Months.
Course Fees: Each part Rs. 1000/-
Course Pre Requisites: 1. G. C. E. O/L with 3 credits and a pass in English Language
2. Should pass the centre's Aptitude test.
DIRECTIONS FOR ENTROLMENT:-
Aptitude Test on 25th Oct. 10-00 a. m.
Application forms available in the College Office.
Apply before 20-10-83.

## கல்குடாவில் இராணுவ தாக்குதல்:

# மூவருக்கு கடும் காயம்!

(மட்டக்களப்பு)

கல்குடா தொகுதியில் இராணுவத்தினரால் தாக்கப்பட்ட மூவர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களை உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு.கே. டபிள்யூ. தேவநாயகம் ஆஸ்பத்திரியில் சென்று பார்த்தார்.

கல்குடா தொகுதியிள்ள அப்பாவிப் பொதுமக்கள் கடந்த சில தினங்களாக இராணுவத்தினரால் தாக்கப்பட்டு வருகின்றனர்

இத்தாகுதல்பற்றி பொதுமக்கள், அமைச்சர் தேவநாயகத்திடம் புகார் செய்துள்ளனர். இதுபற்றி ஜனதிபதியின் கவனத்திற்கு கொண்டுவருவதாக அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

இராணுவத்தினரின் துப்பாக்கி சூட்டின்போது காயமடைந்த ஒருவர் தோள் பட்டைமுறிந்த நிலையிலும், இருவர் இடுப்பு. கால் எலும்பு முறிந்த நிலையிலும் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகின்றனர்

இராணுவத்தினரின் நடமாட்டத்தினல் பொதுமக்கள் மாலை 6 மணிக்குப்பின் வெளியில் செல்ல அஞ்சுகின்றனர்.

## இப்படியும் நடக்கிறது

வடபகுதியில் உள்ள அகதிகள் கிறிஸ்தவ இயக்கம், ஒரு கல்விநிலையத்தை ஆரம்பித்துள்ளது.

இதற்கு, ''சிவபாத கல்விநிலையம்'' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இந்தப் பெயரில் அர்த்தம் எதுவும் உண்டா?

சிங்களவரின் வன்செயலால் பாதிக்கப்பட்ட தமிழரின் கல்விநிலையம் என்பது இதன் அர்த்தமாம்!

●

அண்மையில் சிவகாசியில், ஜனநடமாட்டம் மிகுந்த பகுதியில் ஒரு 'கோப்பி பார்' ஓகோ என்று திறந்துவைக்கப்பட்டது.

இந்த கோப்பிக் கடையின் பெயர் என்ன தெரியுமா?

''விடுதலைப்புலி வீரன் குட்டிமணி காபி பார்''.

தினசரி வருமானம் எக்கச்சக்கமாம்!

—ஊடுருவி

## பண்டத்தரிப்பு நகை திருட்டு: இருவர் கைது நகை மீட்பு!

(யாழ்ப்பாணம்)

பண்டத்தரிப்பில் நடைபெற்ற 37.250 ரூபா பெறுமதியான நகைகள் திருட்டு சம்பந்தமாக, யாழ் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிசார் சந்தேகத்தின் பேரில் இருவரைக் கைது செய்துள்ளதுடன், 8 பவுண் நகைகளையும் மீட்டுள்ளனர்

பண்டத்தரிப்பைச் சேர்ந்த டொன்பொஸ்கோ அல்லது தங்கராசா (29வயது), ஜஸ்டின் செல்வநாயகம் (28வயது) ஆகிய இருவரும்கைதுசெய்யப்பட்டவர்களாவர். இவர்கள் இருவரும் மேல் விசாரணைக்காக நேற்று காங்கேசன் துறைப் பொலிஸில் ஒப்டைக்கப்பட்டுள்ளனர் இத்திருட்டு சம்பந்தமாக மேலும் ஒருவரைப் பொலிசார் தேடிவருகின்றனர்.

கடந்த ஜூன் மாதம் 21ம் திகதி இரவு பண்டத்தரிப்பு கீரிமலை ரோட்டிலுள்ள ஹெக்டர் பிரான்ஸிஸ் என்பவரின் வீட்டில், ஜன்னல் உடைத்து 37, 250 ரூபா திருடப்டிருந்தது.

யாழ். பொலிஸ் அதிபர் ரி. ஈ. ஆனந்தராசாவுக்கு கிடைத்த இரசசியத் தவலின்பேரில் யாழ். மாவட்ட குற்றத் தடுப்புபிரிவு பதில் பொறுப்பதிகாரி சார்ஜன்ட் ஜி. மாசிலாமணி தலைமையில் சென்ற பொலிஸ் கன்ஸ்டபிள்கள் என். கனகலிங்கம், எஸ். நவரத்தினம், கே. தர்மகுலசிங்கம், வி. வாமதேவன், டபிள்யு அபயவர்த்தன ஆகியோரைக்கொண்ட கோஷ்டியினர், மேற்குறிப்பிட்ட இரு சந்தேக நபர்களைக்கைது செய்ததுடன் 8 பவுண் நகைகளையும் மீட்டுள்ளனர். மேலும் ஒருவரை பொலிசார் தேடிவருகின்றனர். (மா)

## 40,000 இலக்குகளில் அணுஆயுத தாக்குதல்

லண்டன், அக்.6

40, 000 இலக்குகள் மீது அணுஆயுத தாக்குதல் நடத்த அமெரிக்க அரசு தீர்மானித்துள்ளது. இவை அனைத்தும் சோஷலிஸ நாடுகளில் உள்ளன,

இராணுவ ஆராய்ச்சிகள் சம்பந்தமான லண்டன்நிலையம் இங்குவெளியிட்டுள்ள புத்தகத்தில்மேற்படி தகவல் உள்ளது. ஆஸ்திரேலிய தேசியப் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் டெஸ்மான்ட்பால், இந்நூலை எழுதியுள்ளார்.

அணு ஆயுத அமைப்புக்கள், விசேட பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த இராணுவத் தளங்கள், அரசியல் மற்றும் பொருளாதார நிர்வாகக் கேந்திரங்கள், நாட்டின் பொருளாதார மற்றும் தொழில் தளமான ஆலைகள், தொழிற்சாலைகள் போன்ற இலக்குகள் மீது தாக்குதல் நடத்த றீகன் அரசு திட்டமிட்டுள்ளது. அமெரிக்கா மற்றும் நேட்டோ ராணுவத் தலைமையின் தாக்குதல் பட்டியலில் இந்த இலக்குகளின் எண்ணிக்கை மேன் மேலும் அதிகரித்து வருகிறது என்று டாக்டர் டெஸ்மன்ட்பால் தெரிவித்துள்ளார்.

## தேரோவின் சடலம் இன்று தகனம்

(கொழும்பு)

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலமான கொழும்பு வஜ்ஜிரராமய கோவிலின் தலைமை தேரர் வண. நாரததேரோவின் தகனக்கிரியைகள் நாளை சனிக்கிழமை நடைபெறவிருக்கிறது.

85 வயதான தேரோவின் இறுதிச் சடங்குகளில் ஜனதிபதி, பிரதமமந்திரி மற்றும் அமைச்சர்களும் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

## இந்தியாவில்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பதும் உண்மை.

இந்த நிலையில் கிங்கள கிறிஸ்தவர்கள் பெரும்பாலும் இன்றைய நிலையில் பௌத்த சிங்களவருடன் இனச்தியில் சார்ந்து நிற்பதைப்போலவே தமிழ் கிறிஸ்தவரும் பெரும்பான்மையான இந்துக்களுடன் தமிழர் என்ற ரீதியில் இணைந்து சிந்திக்க வேண்டும். அமரர் வண. தனிநாயகம் அடிகளாரின் வரலாற்றை ஊன்றி நோக்கினல் இவ்விடயத்தில் சிக்கல் இல்லை.

எச்சந்தர்ப்பத்திலும் தமிழர் தமது மதமான இந்து சமயத்தின் பெயரால் தம்மை இந்துக்கள் எனக் குறிப்பிட்டால் அது கிறிஸ்தவத் தமிழரையோ, இஸ்லாமியத் தமிழரையோ புறக்கணிப்பதாகாது என்பதைத் தெளிவாக உணரவேண்டும்.

இஸ்லாமியப் பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டாலோ, இஸ்லாமியருக்கு இன்னல் விளைந்தாலோ உலகிலுள்ள இஸ்லாமியநாடுகள் தவருமல் குரல் கொடுக்கும் மதரீதியில். அவ்வாறே கிறீஸ்தவர்களென்ற அடிப்படையில் ஏதும் அசம்பாவிதம் விளைந்தால் கிறீஸ்தவ உலகம் தூங்கிவிடாது.

இன்றையநிலையில் பொதுவாக தமிழர்கள் அவலப்படுகின்றனர். அதேவேளை இந்து ஆலயங்களுக்குக் குறிப்பாக நேர்ந்துள்ள அவலம் சிந்தனைக்கும் அப்பாற்பட்டது. இந்தவேளையில் இந்துக்களென்ற அடிப்படையிலும் தமிழர் சிந்திப்பது முற்றிலும் முறையானது.

இந்தியாமீது இலங்கைவாழ் தமிழருக்குள்ளது மொழி, இன, மதப்பற்றுகளே. இலங்கைத் தமிழரையும், இந்திய மக்களையும் இவை மூன்றும் மூன்று கோணங்களில் இணைக்கின்றன. இதனைத் தெளிவாக உணர்ந்து கொண்டு இனிமேலும் இந்து என்று ஒரு தமிழன் தன்னைக் கூறிக் கொண்டால் ''பார்! பார்!! தமிழனைப் பிரிக்கின்ருன் பார்!!!'' என்று அவலக்குரல் எழுப்பவேண்டாமென்று தமிழ்தாயின் பெயரால் கேட்டுக் கொள்கின்றேன்.

த. மனேகரன்,
கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

## இலங்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போது கலவான எம் பி. திரு. சரத் முத்தெட்டுவேகம வின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் அரசுடன் நடத்திய பேச்சுக்களின் விபரங்கள் சபையில் வெளியிடப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்ட திரு. முத்தெட்டுவேகம பம்பாயிலிருந்து மலைதீவு செல்லும் வழியில் இங்கு தரித்துச் செல்லவிருக்கும் அமெரிக்க விமானத்தின் விஜயம் இப் பேச்சுவார்த்தையின் விளைவா என்றும் கேட்டார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர், அமெரிக்க அமைச்சரின் விஜயம் குறித்து எவரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை. இச்சந்திப்பு சம்பிரதயாய பூர்வமான சந்திப்பு என்ருர்.

உலகபொருளாதார பிரச்னை குறித்தும் இருநாடுகளுக்கிடையேயான நல்லுறவு குறித்துமே இங்கு ஆராயப்பட்டது என்றும் தெரிவித்த பிரதமர், அமெரிக்க விமானம் தரையிறங்கிகுவது பற்றி தூதரகம் அனுமதி கோரியிருப்பதாகவும் இலங்கை விமானப்படையினர் அனுமதித்தால் வெளிவிவகார அமைச்சு இதற்கான அங்கீகாரத்தை வழங்கும் என்ருர். (கு)

## இடம்பெயர்ந்த

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது.

இடம்பெயர்ந்து வேலையின்றி இருக்கும் தனியார்துறை ஊழியர்களுக்கும் அரச, கூட்டுத்தாபன, சபைகளில் வேலை வாய்ப்பு வழங்க வேண்டுமென்றும் அரச அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

இனக் கலவரங்களால் 5ஆயிரம் தனியார்துறை ஊழியர்கள் பாதிக்கப்பட்டு வேலையிழந்துள்ளனர் எனப் புள்ளி விபரம் ஒன்று தெரிவிக்கின்றது. [மா]

## இங்கு வேலை

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த வங்கி ஊழியர்களுக்கு அவர்களது சொந்த மாவட்டங்களில் இருக்கும் கிளைகளில் உள்ள காலியான இடங்களில் வேலை வழங்குவது குறித்து நடவடிக்கைகளை வங்கிகளின் பிராந்திய அலுவலகங்கள் மேற்கொண்டு வருகின்றன.

## அரச கூட்டுத்தா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டுத்தாபனங்களில் உள்ள காலியிடங்கள், பாதிக்கப்பட்ட ஊழியர்களைக்கொண்டு இக் காலியிடங்களை நிரப்பும்முறை ஆகியவை தொடர்பாக பட்டியல் ஒன்றைத் தயாரித்து அத்தியாவசியசேவைகள் நாயகம் திரு. பிரட்மன் வீரக்கோனுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் அரசாங்க அதிபரின் பணிப்பின்பேரில் மேற்கொள்ளப்படுகிறது. (மா)


## பரதநாட்டியம்

போதனையுடன் கூடிய பயிற்சி வகுப்புகள்

**15-10-1983 ல் ஆரம்பமாகின்றன**

● சென்னை அடையாறு அரசினர் இசைக் கல்லூரிப்பட்டதாரி, வகுப்புகளை நடத்துவார்.

# கலாலயம்

14, கண்டிவீதி, யாழ்ப்பாணம்.

(யாழ். உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு அண்மையாக)

சுண்டிக்குளி யாழ்ப்பாணம்.

(9158)


## மரண அறிவித்தல்

### சரவணமுத்து குமாரசுவாமி

உரிமையாளர் - தேநீர்க்கடை
மருதடி விநாயகர் ஆலயம், மானிப்பாய.

6-10-83 வியாழக்கிழமை காலமானர். அன்னரின் பூதவுடல் இன்று காலை (7-10-83) 10 மணிக்கு தகனக் கிரியைகளுக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
சகோதரர்கள்

9157

## மரண அறிவித்தல்

### ஜெயபாலன் சவிரிமுத்து

இளவாலை புனித என்றியரசர் கல்லூரிப் பழைய மாணவர் ஜெயபாலன் சவிரிமுத்து காலமானர். இவர் காலஞ்சென்ற ருெபேட் சவிரிமுத்து, திருமதி ஜோசபின் சவிரிமுத்து என்போரின் மூத்த புதல்வரும், ஜிற்றேந்திரன், ருேகினி ஆகியோரின் சகோதரரும், வீரசிங்கம் (நைஜீரியா) திருமதி ஜீவராணி ஜிற்றேந்திரன் என்போரின் மைத்துனருமாவர்.

அன்னரின் சடலம் 8-10-83 சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு பண்டைத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலயத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு திருவிரங்கற் பலி நிகழ்த்தப்பட்டபின் பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

9159

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81. Eelanadu-P. O. Box, 49. Telegram, Eelanadu, Telephone, 22389—24126.